63 ஆவது ஆண்டு விழா மலர்

# அரும்பு 2




கிளி/ஞானிமடம் அ.த.க பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி / ஞானிமடம் அ.த.க. பாடசாலை

# 63 ஆவது ஆண்டு விழா

# அரும்பு - 02

### வெளியீடு

கிளி / ஞானிமடம் அ.த.க. பாடசாலை

பூநகரி

கிளிநொச்சி

16-06-2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கீதம்

வாழ்க வாழ்க வாழ்க - எங்கள்
வித்தியாலயம் வாழ்கவே ஞானிமட வித்தியாலயம்
வாழ்க வாழ்க வாழ்கவே.

நெல்வளம் பனைவளம் நிறைந்த மண்வளம்
பொன் சொரியும் பூநகரி வாழ்க வாழ்க வாழ்கவே.

வித்தைகள் பல தந்தும் விக்கினம் தீர்க்கும்
விநாயகர் அருள் கொண்ட ஞானிமடம் வாழ்கவே
(வாழ்க வாழ்க)

அன்பும் அறிவும் தந்திடும் - எங்கள்
அதிபர் ஆசிரியர் வாழ்க வாழ்க வாழ்கவே.
(வாழ்க வாழ்க)

ஒழுங்குடன் கல்வியைக் கற்றிடும் - எங்கள்
மாணவமணிகள் வாழ்க வாழ்க வாழ்கவே.
(வாழ்க வாழ்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையின் தூரநோக்கு

சர்வதேச சமூகத்தில் வாழ்வதற்கான தரமான கல்வியை வழங்கி நற்பிரஜைகளை உருவாக்கல்

## பணிக்கூற்று

மாறிவரும் உலகின் அறைகூவல்களுக்கு முகம் கொடுத்து ஆரோக்கிய வாழ்விற்குரிய அடிப்படையை வழங்கி வாழ்வில் மேம்பட்டவராக்கல்.

## Vission

Creating good citizens by providing with quality education in order to live among the international communities.

## Mission

To uplift the life by providing the fundamentals for a healthy life in order to face the challenges of the modern changing world.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரும்பு மலர்க்குழு

| | | |
|---|---|---|
| கௌரவ ஆலோசகர் | : | திருமதி.தவமலர் கனகசபை (அதிபர்) |
| மலராசிரியர் | : | திரு.அ.லிங்கராஜ் |
| மலர்க்குழு | : | திருமதி.வி.சோதிநாதன் (பிரதி அதிபர்)<br>திருமதி. நி. சுதர்சன்<br>திரு.சி.சிங்கராசா<br>திரு.சி.தினேஸ்<br>திருமதி.அ.சிவநேசன் |
| பாடசாலை மலர் | : | அரும்பு - 02<br>2014 |
| கணினி வடிவமைப்பு | : | திரு.இ.தனஞ்சயன் |
| அச்சுப்பதிப்பு | : | திருச்செல்வி அச்சகம், மானிப்பாய். |
| வெளியீடு | : | மலர்க்குழு<br>கிளி / ஞானிமடம் அ.த.க. பாடசாலை,<br>பூநகரி,<br>கிளிநொச்சி. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி | vii |
| 2. | பிரதேச செயலரின் ஆசிச்செய்தி | viii |
| 3. | வாழ்த்துச் செய்தி (பிரதிக்கல்விப் பணிப்பாளர்- கல்வி அபிவிருத்தி) | ix |
| 4. | அரும்பு ஒரு கரும்பு (கோட்டக்கல்விப் பணிப்பாளர்) | x |
| 5. | வாழ்த்துச் செய்தி (உதவிக்கல்விப் பணிப்பாளர் - தமிழ்) | xii |
| 6. | ஞானிமடம் பிரகாசிக்க.. (உதவிக்கல்விப் பணிப்பாளர் - ஆரம்பக்கல்வி) | xiii |
| 7. | வாழ்த்துச்செய்தி - ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் | xiv |
| 8. | வாழ்த்துச்செய்தி - ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் | xv |
| 9. | வாழ்த்துச்செய்தி - தவிசாளர், பிரதேசசபை, பூநகரி | xvi |
| 10. | வாழ்த்துச் செய்தி - முன்னாள் கொத்தணி அதிபர் | xvii |
| 11. | வாழ்த்துச்செய்தி-சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் | xviii |
| 12. | வாழ்த்துச்செய்தி - கிராம அலுவலர், ஞானிமடம் | xix |
| 13. | அதிபர் அறிக்கை | xx |
| 14. | மலராசிரியர் உள்ளத்திலிருந்து... | xxii |
| 15. | அன்பின் பெருமை- கவிதை | 1 |
| 16. | பொது அறிவு | 2 |
| 17. | வண்ணத்துப் பூச்சி, நீ தெய்வம் - கவிதை | 3 |
| 18. | பள்ளிக்கூட ஆலமரம் - சிறுகதை | 4 |
| 19. | சிறந்த செயற்பாட்டிற்காக நற்சிந்தனைகளை வளர்த்துக்கொள்வோம் | 9 |
| 20. | நட்பு - கதை | 10 |
| 21. | விடுகதை | 12 |
| 22. | மரம், மக்கள் மனதை மகிழாதோ - கவிதை | 13 |
| 23. | உலக நீதி கூறும் நன்னெறிகள் | 14 |
| 24. | மாணவர்களுக்கிடையிலான அன்பும் தொடர்பும் | 16 |
| 25. | நான் தான் - கவிதை | 18 |
| 26. | மனம்விட்டு நீங்காத எம் கல்லூரி | 19 |
| 27. | நேரம் பொன்னானது | 20 |
| 28. | குரு தட்சணை - சிறுகதை | 21 |
| 29. | அன்னையும் பிதாவும் - கவிதை | 24 |
| 30. | எங்களூர், பாடசாலை, அம்மா - கவிதை | 25 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. Television 26
32. Mobile Phone 27
33. Sports and Games 28
34. My Hobby, My Pet 29
35. My Dream, Oh! My Friend, The Subject I like best 30
36. Last Holiday, My Country 31
37. A Visit to the Zoo 32
38. உடற்பயிற்சிக்காகச் சில நிமிடங்கள் 35
39. மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் முக்கியத்துவம் 37
40. முன்றெழுத்தில் வாழ்க்கை 42
41. மனிதனாக வாழும் வழிகள் 43
42. தாய்மை 44
43. 63ஆவது ஆண்டு நிறைவு விழாவில் பரிசுபெறும் மாணவர் விபரம் 47
44. பாடசாலையின் ஆளணி விபரம் 51



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் குழாம்




**முன்வரிசையில் இருப்போர் (இடமிருந்து வலமாக)**

திரு.அ.லிங்கராஜ். திருமதி.ஜெ.ஜெயரூபன்.திருமதி.வி.சோதிநாதன் (பிரதி அதிபர்), திருமதி.த.கனகசபை (அதிபர்), திருமதி.அ.சிவநேசன், திருமதி.ஸ்ரீ.சிவரூபன், திரு.சி.சிங்கராசா.

**இரண்டாவது வரிசையில் நிற்போர் (இடமிருந்து வலமாக)**

திரு.சி.தினேஸ், திருமதி.இ.புவியரசன், திருமதி. நி .சுதர்சன், திருமதி.தி. சசிக்குமார், திருமதி. ஜெ.தேவானந்,

திருமதி.சு.சிவகரன், திருமதி.சு. நிசாந்தன், திரு.எ.சுரேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயக்கல்வி பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச்செய்தி



கிளி/ஞானிமடம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் தமிழ் இலக்கிய மன்றத்தினால் வருடந்தோறும் வெளியிடப்படும் "அரும்பு" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். கல்வியிலும், விளையாட்டிலும், கலைகளிலும் சிறந்து விளங்கும் கிளி/ஞானிமடம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையானது பூநகரிக் கோட்டப் பாடசாலைகளில் தலைசிறந்து விளங்கும் பாடசாலைகளில் ஒன்றாகும் என்பது பெருமைக்குரியதாகும்.

பாடசாலைக் கலைத்திட்டத்தை வெற்றிகரமாகவும் முழுமையாகவும் நடைமுறைப்படுத்தத் துணை புரிவன இணைந்த கலைத்திட்டங்களாகும். இணைந்த கலைத்திட்டச் செயற்பாடுகளில் "சஞ்சிகையாக்கம்" என்பது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. மாணவர்கள் சஞ்சிகையாக்கச் செயற்பாடுகளில் ஈடுபடும் போது தலைமைத்துவம், தொடர்பாடல், படைப்பாற்றல் முதலிய சமநிலை ஆளுமைப் பண்புகள் வளர்த்தெடுக்கப்படுகின்றன. "அரும்பு" சஞ்சிகையினூடாக கிளி/ஞானிமடம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களின் சமநிலை ஆளுமைப் பண்புகள் சிறப்பான முறையில் வளர்த்தெடுக்கப்படுவதற்கு வழிசமைத்த பாடசாலை முதல்வர் திருமதி தவமலர் கனகசபை அவர்களையும் இதழாசிரியர் திரு. அ.லிங்கராஜ் அவர்களையும் சஞ்சிகையாக்கக் குழுவினரையும் ஆக்கங்களை வழங்கிய படைப்பாளிகளையும் மனதார வாழ்த்துகின்றேன்.

திரு. க.முருகவேல்
வலயக்கல்வி பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரதேச செயலரின்

# ஆசிச்செய்தி

மடங்கள் கொண்டு ஞானிகள் தங்கி வரவேற்று விருந்தோம்பி வழியறிவித்து அனுப்பிய பெருமைக்குரிய ஞானிமட கிராமத்தில் இயங்கிவரும் கிளி/ஞானிமடம் அ.த.க பாடசாலையினால் வெளியிடப்படும் "அரும்பு 2" சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் அளவற்ற ஆனந்தமடைகின்றேன்.

அரும்பிய மாணவர்களின் விரும்பிய ஆற்றல்களை படைப்புக்களாக வெளியே கொண்டு வருவதற்கு இச் சஞ்சிகை களம் அமைத்துக் கொடுப்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன். சிறுகதை தொடங்கி சிந்தனைத்துளி வழியாக கவிதை வரை பலதுறை சார் ஆக்கங்களை வெளியிடும் இப் பாடசாலையின் முயற்சிக்கு பாராட்டுக்கள்.

இவ் அரும்பானது மேலும் மலராகி பிரகாசிக்க வாழ்த்துவதோடு இதற்கு பக்கபலமாக இருக்கும் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் மனநிறைவோடு பாராட்டி, சஞ்சிகை சிறப்பாக வெளிவர ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.சி.சத்தியசீலன்
பிரதேச செயலர்,
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கிளி/ஞானிமடம் அ.த.க பாடசாலை 62 வருடங்களை நிறைவு செய்யும் இவ்வேளையில் பாடசாலையால் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக வெளியிடப்படும் அரும்பு சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தியினை வரைவதில் மகிழ்வடைகின்றேன்.

பாடசாலையின் செயற்பாட்டில் மாணவர்களது அறிகை விருத்திக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவது மிக அவசியமானதாகும். அத்தகைய சந்தர்ப்பங்களில் விளையாட்டுப்போட்டி, மாணவர் மன்றம், பல்வேறு கலைத்திறன் போட்டிகள், சஞ்சிகை வெளியீடு என்பன முக்கியமானவையாகும். சஞ்சிகை வெளியீட்டின் மூலம் மாணவர்களதும், ஆசிரியர்களதும் படைப்பாற்றல் திறன் ஊக்குவிக்கப்படுகிறது. அத்துடன் பாடசாலையின் சகல செயற்பாடுகளும் எதிர்கால சந்ததி அறிந்து கொள்ளும் வகையில் ஆவணப்படுத்தப்படுகிறது.

எனவே ஆவணப்படுத்தல், படைப்பாக்கத்திறன் விருத்தி, பாடசாலையைப் பிரசித்தப்படுத்தல் ஆகிய மூன்று பிரதான நோக்கங்களை பிரதிபலிக்கும் வகையில் அரும்பினை வெளியிடுவது வரவேற்கத்தக்கதாகும். நாட்டின் எதிர்காலப் படைப்பாளுமைகளை உருவாக்கும் அடிப்படைப் பயில்வாக அரும்பின் வரவைக் கருதலாம்.

இதனை வெளியிடும் அதிபர், மலர்க்குழுவினர், படைப்புக்களை எழுதிய ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்

திரு.சு.ஸ்ரீகுமரன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி),
வலயக் கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரும்பு ஒரு கரும்பு

கிளி / ஞானிமடம் அ.த.க பாடசாலையினரால் வெளியிடப்படும் "அரும்பு" சஞ்சிகை இதழ் - 2 வெளியிடுவதையிட்டு நான் மட்டில்லா மகிழ்ச்சியடைகிறேன். அரும்பு சஞ்சிகை சிறிய ஒரு முளையாக வெளிவந்த போதும் "கடுகு சிறிதாகினும் காரம் பெரிது" என்கின்ற முதுமொழிக்கமைவாக சஞ்சிகை அதன் ஆக்கங்களைத் தாங்கி வெளிவருவதோடு அதன் வைப்பு முறைகள் அனைத்தும் பாராட்டுக்குரியது. சிறிய சிறிய கட்டுரைகள் கதைகள், கவிதைகள், சிறுகதைகள் என்பவற்றை அடுக்கடுக்காக எடுத்து நகர்த்துகின்ற வைப்பு முறை இந்த இதழ் ஆசிரியர் திரு.அ.லிங்கராஜ் அவர்களின் பாண்டித்தியத்துக்கு நல்ல எடுத்துக்காட்டாகும். அந்த வகையில் இந்த இதழ் அனைவரும் படிக்கவும் சிந்திக்கவும் தூண்டுவதில் செல்வாக்குச் செலுத்துகிறது.

கிளி / ஞானிமடம் அ.த.க பாடசாலை 2012 இற்கு முன்பு ஒரு சிறிய பாடசாலையாக விளங்கிய போதும் அதற்கு பின்பு இப் பாடசாலையின் முதல்வி திருமதி.த.கனகசபை மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள் பங்களிப்பு அனைவரையும் ஒன்றுசேர்த்து இயக்குகின்ற இந்த பள்ளி நிர்வாகத்தின் தனிச்சிறப்பினால் இந்தப் பாடசாலை இன்று கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முன்னணிப் பாசாலைகளில் ஒன்றாக விளங்கிவருகின்றது.

இப்பாடசாலையின் மாணவர்கள் தொகை குறைவாக இருந்த போதும் இருக்கின்ற அனைத்து மாணவர்களையும் ஈடுபடுத்தி பல இணைபாடவிதான செயற்பாடுகளில் வெற்றியீட்டுவதில் இந்த பள்ளி முதல்வரும், ஆசிரியர்களின் கூட்டுறவும் பாராட்டுக்குரியது.

இப்பாடசாலையின் தமிழ் இன்னிய குழுவினரது செயற்பாடுகளும், தமிழ்த்தினப் போட்டிகளில் மாணவிகளின் செம்பு நடனமும் கிளிநொச்சி மாவட்டத்தின் ஏனைய பாடசாலைகளுக்கு சவாலாகவே அமைந்துள்ளன.

இப்பாடசாலையின் கண்ணுக்கெட்டிய தூரத்தில் அமைந்துள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகதேவன்துறைமுகம் ஒரு காலத்தில் பெரும் செல்வாக்குகளைச் சேர்க்கும் வணிகர்களின் பட்டினமாகவும் விளங்கியிருந்தது. அந்தக் காலத்தில் மடம் அமைத்து அன்னதானங்களும் அடியார்களுக்கும் உண்டி, உறையுளும் அமைத்தமையாலேதான் இக் கிராமத்திற்கு ஞானிமடம் என பெயர் கொள்ளப்பட்டதாக புராதன வரலாறு கூறும். இக்கிராமத்தில் இன்றும் உண்மையும், தியாகமும், அர்ப்பணிப்பும் நிறைந்த உழைத்து வாழும் நல்லவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இதனால் இறையருளும் ஆசியும் பொங்கி வானளாவ உயர்ந்த கல்விக்கூடம் இக்கிராமத்தின் ஏழைச் சிறாருக்கு நல்ல கல்வியை வழங்கிவருகிறது.

இன்று தரம் ஒன்று தொடக்கம் தரம் 11 வரை உள்ள வகுப்புகள் இங்கு வளர்ந்து விருச்சமாகி இன்னும் பதினைந்து வருடங்களுக்கு அப்பால் ஒரு உயர்தரப் பாடசாலையாக வளரும் என நான் நம்புகிறேன்.

எனவே இப்பாடசாலையை இப்பகுதி மக்கள் தங்களின் உயிராக எண்ணி பாதுகாத்து வளர்த்து வரவேண்டும் என நான் மிகவும் வினயமாகக் கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் இந்த இதழின் உருவாக்கத்திற்கும் அதன் வெளிவருகைக்கும் உழைத்த அத்தனை உள்ளங்களையும் இந்த வேளை நான் மிகவும் சிரம் தாழ்த்திப் பாராட்டுகிறேன். இதழ் மூன்றையும் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறேன்.

திரு.சுப்பிரமணியம் தர்மரத்தினம்
BA(Hons), MA, PGDE, PGEM(Merit), MEd(Merit), SLPS,
கோட்டக் கல்விப்பணிப்பாளர்,
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு"

உயர்தனிச் செம்மொழியாம் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட நாம் பேறு பெற்றவர்கள். தமிழ்மொழியினுடைய தொன்மையினையும் அதன் சிறப்பையும் தமிழில் தோன்றிய இலக்கிய இலக்கணங்கள் பறைசாற்றுகின்றன. வாழ்வின் அனுபவ முதிர்வின் வெளிப்பாடுகளாக அமைந்த தமிழிலக்கியப் படைப்புக்கள் உலக இலக்கிய அரங்கில் உயர்வாக மதிக்கப்படுகின்றன. தமிழிலக்கியப் படைப்புக்களில் ஈடுபடும் படைப்பாளிகளாக மாணவர்களை வளர்த்தெடுப்பது மொழி ஆசிரியர்களின் கடப்பாடு ஆகும். அறிவியல் மற்றும் பொருளாதாரத்தை நோக்கிப் பயணிக்கும் இன்றைய வாழ்வியற் சூழலில் மாணவர்களிடம் படைப்பாற்றல் நாட்டம் அருகி வருகின்றது என்ற ஆதங்கம் பலரிடமும் உள்ளது. ஆனால் கிளி/ஞானிமடம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலே மாணவர்களின் படைப்பாற்றலை வளர்த்தெடுப்பதற்கான களம் அமைக்கப்பட்டிருப்பது பாராட்டிற்குரிய விடயமாகும். அந்த வகையில் கிளி/ஞானிமடம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் இலக்கிய மன்ற வெளியீடாக வருடந்தோறும் வெளிவரும் "அரும்பு" சஞ்சிகையானது, பல இளம் படைப்பாளிகளை உருவாக்கி வருகின்றது. மாணவர்களின் சமநிலை ஆளுமைப் பண்புகளை வளர்த்தெடுக்கின்றது.

இந்த வகையில் "அரும்பு" சஞ்சிகை வெளியீட்டுக்காக அயராது உழைத்த பாடசாலை அதிபர் திருமதி த. கனகசபை அவர்களையும், இதழாசிரியர் திரு. அ.லிங்கராஜ் அவர்களையும், சஞ்சிகையாக்கக் குழுவினரையும், படைப்பாளிகளையும் பாராட்டிவாழ்த்துகின்றேன். தமிழ் மொழியின்மீதும் கலைகளின்மீதும் பண்பாட்டின்மீதும் ஈடுபாடும் பற்றும் கொண்ட ஆளுமைமிக்க சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டு வரும் கிளி/ஞானிமடம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் பணி ஓங்குக! உலகமெலாம்.

திருமதி. வி. மதுரநாயகம்,
உதவிக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

2014ம் ஆண்டு 63வது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடும் கிளி/ஞானிமடம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் இரண்டாவது இதழான அரும்பு வெளியீடானது வெளியிடுவதையிட்டு பெருமகிழ்வடைவதோடு புகழ் பூத்த பூநகரி மண்ணின் பெருமையை நிலைநாட்டும் கல்விப் பெருந்தகைகளை பெற்றெடுத்த பெருமை மிகு பாடசாலைகளில் ஒன்றாக இப் பாடசாலை திகழ்கின்றது.

இங்கு கல்வி கற்கும் மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணரும் களங்கள் இங்கு முறையாக அமைக்கப்படுவதால் தான் இவ்வாறான படைப்புக்கள் ஆண்டு தோறும் வெளிவரக் காரணமாக அமைகின்றது. சாதனை படைக்கும் பிள்ளைகளின் சாதனைகளை வெளிக்காட்டுவதற்கும், சாதனை படைக்க துடிக்கும் பிள்ளைகளின் உணர்வுகளை தட்டி எழுப்பும் சிறந்த களமாக இவ் அரும்பு இதழ் அமைய வேண்டும் என்பது எமது விருப்பாகும்.

அரும்பு வெளியீட்டின் ஆக்கங்கள் யாவும் மாணவர்களின் கற்றல் தேடலுக்குரிய ஒரு வழிகாட்டியாக அமைவதுடன் ஒவ்வொரு ஆக்கமும் சிறப்பான கருத்து வெளிப்பாட்டுடன் அமைவதும் சிறப்பாகும். இவ் ஆக்க எழுத்தாளர்களின் சிந்தனையை கட்டி எழுப்புவதுடன் இவர்களுடைய சிந்தனையூடாக மேன்மேலும் பல சிந்தனையாளர்களை இதய சுத்தியுடனும் அர்ப்பணிப்புடனும் தொடர்ந்து செயற்படும் போது பூநகரிப் பிரதேசத்தின் கல்வியை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்ல முடியும் என்பது உறுதியாகும். அரும்பு இதழானது தொடர்ந்து பல படைப்புக்களுடன் வெளிவர எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.பா. ஸ்ரீஸ்குமார்,
சேவைக்கால ஆசிரியஆலோசகர்,
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

நமது தேசத்தில் நிகழ்ந்து, முடிந்து போன போரின் கொடுமையால் ஞானிமடம் என்ற பழம் பெரும் புகழ் பூத்த கிராமமும், அக் கிராமமக்களின் வாழ்விடங்களும் அழிந்தது மட்டுமல்ல 60 ஆண்டு வரலாற்றைக் கொண்ட ஞானிமடம் அ.த.க பாடசாலையும் தரைமட்டமாகி இடிபாட்டுடன் இருந்த நிலைமாறி இன்று அரசினதும், சமூகப் பெரியார்களினதும், புலம்பெயர் உறவுகளினதும் உன்னதமான பங்களிப்பை பெற்று சகல வளமும் கொண்ட ஒரு பாடசாலையாக நிமிர்ந்து பட்டொளி வீசிப் பிரகாசிக்கின்றது. கோட்ட மட்டத்திலும், வலயமட்டத்திலும், தேசிய மட்டத்திலும் இப் பள்ளி மாணவர்கள் சாதனை செய்ய பற்றுறுதியுடன் சேவை செய்து நிற்கும் அதிபர் ஆசிரியர்களின் அயராத உழைப்பின் சின்னமாக 3வது ஆண்டாக "அரும்பு" என்ற சஞ்சிகை வெளிவருவதை பாராட்டாமல் இருக்க முடியாது. மேலும் இப் பாடசாலை அபிவிருத்தி அடைவதற்கும், சாதனைகளை நிலைநாட்டுவதற்கும் பெற்றோர், சமூகம், இலக்கை நோக்கி இப் பள்ளியை நகர்த்த, மாணவர் தொகையை அதிகரிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இச் சஞ்சிகை வெளிவரும் இந் நன்நாளில் நாம் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து இப் பள்ளியை வளர்த்தெடுக்க உறுதி எடுப்போம்.

இச் சஞ்சிகை சிறப்பான ஆக்கங்களைத்தாங்கி வெளிவருவதோடு ஆண்டுதோரும் பூத்துக் குலுங்க வாழ்த்துக்கூறிநிறைவு செய்கிறேன்.

கலாபூசணம் பொன்.தில்லைநாதன்,
ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர்,
கிளிநொச்சி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



பூநகரிப் பிரதேச செயலக பிரிவில், பூநகரிக் கல்விக் கோட்டத்தில் தன்னிகரில்லாக் கல்வி நிறுவனமாக மாணவர்களுக்கு கல்வியையும் ஒழுக்கத்தையும் நற்பண்புகளையும் வரையாது வழங்கிவரும் கிளி/ஞானிமடம் அ.த.க பாடசாலையின் அரும்பு 2 இதழுக்கு பரிசளிப்பு விழாவையொட்டி வெளிவரும் இச் சஞ்சிகைக்கு எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

63வது அகவையில் காலடி எடுத்து வைக்கும் இப் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் ஆகியோரின் அயராத உழைப்பின் காரணமாக இவ் வித்தியாலயம் சகல வளங்களுடனும் மாணவர்களுக்கு கல்விச் செயற்பாடுகளையும் பாடசாலையின் புறக்கிருத்தியப் பணிகளையும் சிறப்பாக முன் எடுத்து நடாத்தி வருவது எல்லோரும் பாராட்ட வேண்டியதாகும்.

எமது பாடசாலை எமது பிள்ளைகள் என்ற பற்றுறுதியுடன் சேவையாற்றிவரும் அதிபர் ஆசிரியர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். தம்மைச் சுற்றியுள்ள சமுதாயக்கட்டுப்பாடுகளுக்கு ஏற்றபடி மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு அவர்களைத் தயாராக்கி அவர்கள் உயர்ந்த இடத்திற்கு செல்வதற்கு இவ் வித்தியாலயம் உதாரணமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். "வையந்தோரும் தெய்வந்தொழு" என்ற பெரியோர் வாக்கிற்கமைய கல்வியுடன் ஆன்மீகத்தையும் ஊட்டி வளர்க்கும் இவ் வித்தியாலயத்தினை மனதார வாழ்த்துகின்றேன். திறமையுள்ள மாணவர்களை மேலும், ஊக்குவிக்கவும் ஏனைய மாணவர்களை திறமை நிலை அடைய ஊக்குவிப்பதற்கும் வழிசமைக்கும் பரிசளிப்பு விழா மலரான அரும்பு 2 சிறப்புடன் அமைய எனது பூரண ஆசியையும் நல்வாழ்த்துக்களையும் வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

நன்றி

திரு.தி. கணபதிப்பிள்ளை,
ஓய்வு பெற்ற முன்னாள் கோட்டக் கல்விப்பணிப்பாளர்,
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

ஞானிமடம் சித்தன்குறிச்சி புராதன கிராமங்களின் சமூகக் கண்ணாடியாக அரும்பு இரண்டாவது இதழ் வெளிவருகின்றது.

கையடக்க தொலைபேசி யுகத்தில் கடிதம் எழுதும் ஆற்றல் குறைந்து வரும் வாழ்வியலில் எழுதத் தூண்டும் ஒவ்வொரு ஆண்டுக்கான கொள்கை வகுப்பனவு அதிபரின் ஆரோக்கியமான முகாமைத்துவத்தைக் காட்டுகின்றது.

மீள் குடியேற்றத்துடன் சங்குப்பிட்டி கேரதீவு பால அமைவிற்குப் பின்பு "நிலைமாறு வலயமாக" பூநகரி அமைந்துள்ளது. இதற்கமைய நீண்ட காலத்திற்கான பொருத்தப்பாடான கொள்கை வகுப்பனவை செயற்பாட்டு நடவடிக்கைகளை நம் நாடு வேண்டி நிற்கின்றது. புதிதாக கடைப்பிடிக்க வேண்டிய மரபு சார்ந்ததுமான வாழ்வு முறைகள் பாடசாலைகள் ஊடாக இளம் சந்ததியினருக்கு வலியுறுத்திப் புகட்டப்படல் வேண்டும். தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுவரை என்பதற்கமைய அறிமுகப்படுத்தும் வாழ்வு முறைமை ஆபத்தானதாக அமையக்கூடாது.

அரும்பு மலர்வதற்கு ஆதாரமாகவுள்ள அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பழைய மாணவர்கள் பெற்றோர்கள் நலன் விரும்பிகள் அனைவருக்கும் பழைய மாணவன் என்ற வகையில் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு.பொ. சிறீஸ்கந்தராசா,
தவிசாளர்,
பிரதேசசபை,
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



ஞானிமடம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களின் அரும்பு இதழ் - 2 சஞ்சிகை வெளியிடப்படுவதையிட்டு மட்டற்ற மகிழ்வடைகின்றேன். இச் சஞ்சிகை பாடசாலை மாணவர்களின் ஆக்கத்திறனை வெளிப்படுத்தும் உந்து சக்தியாக விளங்குவதற்கு ஏற்ற வகையில் வெளியிடப்பட வேண்டும். இச் சஞ்சிகை ஆண்டாண்டு காலம் வெளிவந்து மாணவர் உலகிற்கு வெளிச்சம் பாய்ச்ச வேண்டுமென இப் பாடசாலையினால் உருவாக்கப்பட்ட பழைய மாணவன் என்ற பெருமையுடன் ஆசி கூறுகின்றேன்.

கா. குலசேகரம்,
முன்னாள் கொத்தணி அதிபர்,
பூநகரி ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

2014ம் ஆண்டு 63வது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடும் கிளி/ஞானிமடம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் இரண்டாவது இதழான அரும்பு வெளியீடானது வெளியிடுவதையிட்டு பெருமகிழ்வடைவதோடு புகழ் பூத்த பூநகரி மண்ணின் பெருமையை நிலைநாட்டும் கல்விப் பெருந்தகைகளை பெற்றெடுத்த பெருமை மிகு பாடசாலைகளில் ஒன்றாக இப் பாடசாலை திகழ்கின்றது.

இங்கு கல்வி கற்கும் மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணரும் களங்கள் இங்கு முறையாக அமைக்கப்படுவதால் தான் இவ்வாறான படைப்புக்கள் ஆண்டு தோறும் வெளிவரக் காரணமாக அமைகின்றது. சாதனை படைக்கும் பிள்ளைகளின் சாதனைகளை வெளிக்காட்டுவதற்கும், சாதனை படைக்க துடிக்கும் பிள்ளைகளின் உணர்வுகளை தட்டி எழுப்பும் சிறந்த களமாக இவ் அரும்பு இதழ் அமைய வேண்டும் என்பது எமது விருப்பாகும்.

அரும்பு வெளியீட்டின் ஆக்கங்கள் யாவும் மாணவர்களின் கற்றல் தேடலுக்குரிய ஒரு வழிகாட்டியாக அமைவதுடன் ஒவ்வொரு ஆக்கமும் சிறப்பான கருத்து வெளிப்பாட்டுடன் அமைவதும் சிறப்பாகும். இவ் ஆக்க எழுத்தாளர்களின் சிந்தனையை கட்டி எழுப்புவதுடன் இவர்களுடைய சிந்தனையூடாக மேன்மேலும் பல சிந்தனையாளர்களை இதய சுத்தியுடனும் அர்ப்பணிப்புடனும் தொடர்ந்து செயற்படும் போது பூநகரிப் பிரதேசத்தின் கல்வியை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்ல முடியும் என்பது உறுதியாகும். அரும்பு இதழானது தொடர்ந்து பல படைப்புக்களுடன் வெளிவர எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.பா. ஸ்ரீஸ்குமார்,
சேவைக்கால ஆசிரியஆலோசகர்,
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கற்றவர்களும் பண்புடையவர்களும் நிறைந்து செந்நெல் கதிர்கள் தலைசாய்ந்து வணங்க, சிட்டுக் குருவிகள் சிறகடித்து ரீங்காரம் பாடிநிற்க, ஞானிகள் பலர் வாழ்ந்து மடம் அமைத்துப் பணிசெய்த ஞானிமடத்தின் சிறப்புமிக்க இஞ்ஞானிமட வித்தியாலயத்தின் மாணவச் சிறார்களதும் ஆசிரியர்களதும் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் "அரும்பு-2" என்னும் இந்நூலானது எதிர்காலத்தில் மொட்டாகி மலர்ந்து மாணவச் செல்வங்களின் கலை ஆர்வத்தினை வெளிக்கொணர்ந்து பாடசாலையின் பெருமையினையும் சிறப்பினையும் அகிலத்துக்கு எடுத்தியம்ப எடுத்த இம்முயற்சிக்கு அரும்பாடுபட்ட அனைவரையும் வாழ்த்துவதுடன் எதிர்காலத்தில் அரும்பானது புதிய படைப்புக்களோடு வெளிவர எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நன்றி

திரு.ச.தவராசா,
கிராம அலுவலர்,
ஞானிமடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிபர் அறிக்கை

கிளி/ஞானிமடம் அ.த.க பாடசாலையினது 63 வது ஆண்டு விழாவினையொட்டி இன்று அரும்பு-2 எனும் சஞ்சிகை வெளியிடுகின்றமை மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது. மாணவர்களும் ஆசிரியர்களும் தமது உள்ளார்ந்த ஆற்றலை வெளிப்படுத்துவதற்கு வழிசமைக்கின்றது. எமது பாடசாலை தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை வகுப்புக்கள் முன்னர் இருந்த போதிலும் 2013 ஆண்டு தரம் 11 வரை தரமுயர்த்தப்பட்டு முதற்தடவையாக 2013 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்காக மாணவர்கள் தோற்றினர். இப் பாடசாலை பௌதீக வளம் குறைந்த பாடசாலையாக காணப்பட்ட போதும் இன்று சகல வசதிகளும் கூடிய ஓர் அழகான ஒரு பாடசாலையாக விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இன்று இக் கிராமத்தில் உள்ள மக்களுக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பாடாதிருப்பதால் இக் கிராமத்து மக்கள் வேறு வசதியான இடங்களில் வசித்து வருவதால் மாணவர்கள் குறைவாகக் காணப்படுகின்ற போதிலும் எதிர் காலத்தில் மாணவர்கள் தொகை அதிகரித்து வருவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. இப்பாடசாலையைப் பொறுத்தவரை பெற்றோர்கள், பழைய மாணவர்கள், வெளிநாட்டில் உள்ளவர்கள் என்போர் அவ்வப் போது உதவி வருவது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் 2012 ம் ஆண்டின் பின் இராஜேந்திரன் மேகவர்ணன் இப் பாடசாலைக்கு வெற்றிக்கிண்ணங்களை வழங்கியுள்ளார். மாணவர்களின் வாசிப்புத்திறனை ஊக்குவிக்கும் பொருட்டு இப் பாடசாலைக்கு 50,000 பெறுமதியுள்ள புத்தகங்களையும் நூலக அலுமாரியையும் பூநகரி ஞானிமடத்தைச் சேர்ந்த செல்வரத்தினம் செல்வகுமார் (சுவிஸ்) வழங்கியுள்ளார். அத்துடன் குறித்த ஆண்டிற்கு முன்பு பாடசாலையின் வளர்ச்சிக்கு அநுசரணையாக இருந்து செயற்படுகின்ற பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் போன்ற அத்தனை பேரையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன். அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் அரும்பு மலர் வெளியீட்டை வருடாவருடம் வெளியிடுவதற்கு அநுசரனையை பூநகரி சித்தன்குறிச்சியைச் சேர்ந்த அமரர் தம்பையா மயில்வாகனம் ஞாபகார்த்தமாக அவரது பிள்ளைகள் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் எமது பாடசாலைக்கான சரஸ்வதி சிலையினை பூநகரி, சித்தன் குறிச்சியைச் சேர்ந்த அமரர் பரராஜசிங்கம் ஜெயசாந்தன் அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது குடுப்பத்தினர் நிறுவித் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் மாணவர் மேலதிக கற்றல் நடவடிக்கைக்காக 2010 ஆம் ஆண்டு தொடக்கம் சின்னத்தம்பி கல்விக்கூடம் ஒன்றை திரு.திருமதி. இராசலிங்கம் குடும்பம் நிறுவி ஆசிரியர்களுக்கான வேதனத்தையும் தாமே வழங்கி இலவசமாக கல்வியை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பலரது ஒத்துழைப்பினாலும் வளர்ச்சியடைந்து வருகின்ற இப் பாடசாலையில் மாணவர்கள் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று சாதனை புரிவதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் வெற்றியீட்டி வருவதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பூநகரி சித்தன் குறிச்சியைச் சேர்ந்த பேரின்பநாதன் நிலாகரன் (லண்டன்) 2014 ஆம் ஆண்டு விழாவிற்கான உபசரணை அநுசரணையை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. எமது பாடசாலை மாணவர்களின் நலன் கருதி கோட்டக் கல்விப் பணிமனை, வலயக்கல்விப் பணிமனை என்பன அவ்வப்போது உதவி வருவதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் உதவிக்கல்விப் பணிமனையின் அங்கீகாரத்துடனும் யுனிசெப் நிறுவனம் எமது பாடசாலைக்கு பல வசதிகளையும் கொண்ட கட்டிடத்தை அமைத்துத் தந்துள்ளமையால் எமது பாடசாலை சமூகம் மிகுந்த சந்தோசம் அடைவதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஆசிரியர்களும் பெற்றோர்களும் நிறைந்த ஒத்துழைப்பை வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். ஆகவே எமது பாடசாலை கல்வியிலும் ஏனைய துறைகளிலும் முன் நிற்க இறைவன் அருள்புரிவாராக!

திருமதி.த.கனகசபை,
அதிபர்,
B.Ed (கல்விமாணி), SLPS 2-II,
கிளி/ஞானிமடம் அ.த.க பாடசாலை,
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலராசிரியரின் உள்ளத்திலிருந்து...

"அரும்பு-2" என்ற மலரினை பிரசவிப்பதற்கு ஆற்றலை சகல தரப்பினருக்கும் நிறைவாக அருளிய பரம்பொருளின் பாதார விந்தங்களுக்கு சிரம் தாழ்த்தி வணங்குகிறேன். 52 மில்லியன் செலவில் கட்டப்பட்ட பாடசாலை கட்டடம் தலைநிமிர்ந்து நிற்கின்ற இந்த சூழலில் கிளி/ஞானிமடம் அ.த.க பாடசாலை அன்னைக்கு மலர் வெளியீடு செய்து அம் மங்கையின் கல்வி இயலுமைகளை வெளிக்கொணர்வதில் மனநிறைவடைகிறேன்.

மலரினை மலர்வடைய செய்வதற்கு எனக்கு ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் அள்ளி வழங்கிய பள்ளி முதல்வர் திருமதி தவமலர் கனகசபை அவர்களை மலர்குழு சார்பாக இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். இம் மலர் ஆரோக்கியமாக அமைய ஆசிச் செய்திகள் வாழ்த்துக்கள் வழங்கிய சான்றோர்களுக்கு எனது கனதியான நன்றிகள் உரித்தாகுக. இம்மலருக்கு ஆக்கங்களை தந்துதவிய என் அன்புக்கு உரிய மாணவர்கள், ஆசிரியர்கள் எனது நன்றிக்கு உரித்தானவர்கள்.

இம் மலரினை செம்மையான முறையில் உருவாக்கி தந்த திரு. இ. தனஞ்சயன் ஆசிரியர் அவர்களுக்கு எனது பாடசாலை சார்பாக உளம் கனிந்த நன்றிகள். மலர் குழுவிற்கு எனது உளப்பூரிப்பான நன்றிகள் எங்கள் பாடசாலை மலரினை வெளியிட தேவையான நிதியினை தந்துதவிய அமரர் தம்பையா மயில்வாகனம் குடும்பத்தினர்க்கு மலராசிரியர் என்ற வகையில் நன்றியை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்வடைகிறேன்.

அரும்பு-2 என்ற இந்த மலர் மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் படைப்பாக்கத் திறனுக்கு களம் அமைக்கும் செயற்பாடாக அமைந்துள்ளது. எதிர் காலத்தில் மாறிவரும் கல்வி போக்குகளை இனங்கண்டு கனதியான மலராக பிரசவிக்கப்பட வேண்டும். அரும்பு வருடந்தோறும் உதயமாகி தனது தொடர்ச்சியை பறைசாற்ற இறைவனை இறைஞ்சி விடைபெறுகிறேன்.

திரு.அ.லிங்கராஜ்,
ஆசிரியர்,
B.A Dip.in Ed, M.A (2nd Upper), SLTS 2-II,
கிளி / ஞானிமடம் அ.த.க பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் பெருமை

அன்பிற்கும் அளவுண்டோ
ஆழ்கடலே தோற்றுவிடும் - ஆதலால்
அன்பிற்கும் எல்லையுண்டோ
அகிலமே சாட்சி சொல்லும்.

அன்பிற்கும் நஞ்சுண்டோ
அமிர்தத்தையே வென்று விடும்
ஆகையால்
அன்பு தான் இன்ப ஊற்று
ஆசையுடன் அதை நீ போற்று

அன்பு தான்
பாசமும் அன்பு தான் பக்தியும்
அன்பு தான் - சதா
சிவமும் அன்பு தான் ஊடலும்
அன்பு தான்
இவ்வுலகமே அன்பு தான்


ந. தர்மிலன்
தரம்:- 05





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு



மிக நீளமான நதி

- நைல்நதி

மிகப் பெரிய தீவு

- கிறீன்லாந்து

மிகப் பெரிய கண்டம்

- ஆசியா

மிகப் பெரிய சமுத்திரம்

- பசுபிக் சமுத்திரம்

மிகப் பெரிய கடல்

- தென் சீனக்கடல்

மிகப் பெரிய பாலைவனம்

- சஹாரப் பாலைவனம்

மிகப் நீளமான மலைத்தொடர்

- அந்தீஸ் மலைத்தொடர்

மிக உயரமான மலை

- இமயமலை

மிக உயரமான மலைச்சிகரம்

- எவரெஸ்ட்

மிகப் பெரிய நாடு

- ரஷ்யா

அதிகமானவர் பின்பற்றும் சமயம்

- கிறிஸ்தவம்

அதிகளவு பெற்றோலிய வளம் கொண்டது

- சவுதிஅரேபியா

மிக அதிகளவு சனத்தொகை கொண்ட நாடு

- சீனா

மிகவும் சிறிய தேசிய கீதம்

- ஜப்பான் தேசிய கீதம்

மிகவும் சிறிய நாடு

- வத்திக்கான்

வறிய நாடு

- வத்திக்கான்

மிகச் சிரிய கண்டம்

- அவுஸ்ரேலியா

மிகப் பெரிய இராணுவம்

- சீனா

மிகப் பெரிய ஜனநாயக நாடு

- இந்தியா

மிகப் பெரிய கம்யூனிச நாடு

- சீனா

ச. சரண்ராஜ்
தரம்:-06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்ணத்துப் பூச்சி

பட்டுப் போலப் பள பளக்கும்
வண்ணத்துப் பூச்சி உன்னைத்
தொட்டுப் பார்க்க மெத்த ஆசை
கிட்ட ஓடி வந்திடு!

வண்ணப் பொடியைப் பூசி வரும்
வண்ணத்துப் பூச்சி உன்
வண்ண வித்தை காண வந்தேன்
கையில் வந்து அமர்ந்திடு!



அகன்ற சிறகை ஆட்டி ஆட்டி
அழகாய்ப் பறக்கின்றாய் - உன்
அழகு வண்ணக் கோலம் காட்டி
என்னை அருகில் அழைக்கின்றாய்?

சுருக்க முடியாய்ச் சிறகை வீசிக்
சுற்றி பறக்கின்றாய் - உன்
சுருண்ட வாயை நீட்டிப் பூவில்
ஏனோ தேனைக் குடிக்கின்றாய்?

த. சங்கவி,
தரம் 02

## நீ தெய்வம்

அம்மா நீ தெய்வம்
அணையாத தீபம்
ஈரைந்து மாதம்
எனை நீ சுமந்தாய்
பேரின்பம் அதுவே என்றால் -
உன்றன்
செல்வம் நான் என்றாய்
நேரந் தெளிந்தே
நிதஞ் சேவை செய்தேன்
நெஞ்சத்தில் கோயில் கொண்டாய்

மன மஞ்சத்தில் உலா வந்தாய்
நீயே
பாலூட்டி வளர்த்தாயே பல
இன்னல்கள் சகித்தாயே
பாசத்தின் உருவாய் நின்றாயே
தமிழ்
பண்புடன் தாலாட்டி வளர்த்தாயே
நீ உண்ணாத பொழுதும்
நீ உறங்காத இரவும் எத்தனை?
என் நாளும் மறவேன் அம்மா
உன்னை?
கண்ணைக் காத்த இமையே
கருணையின் கடலே என்னை
வாழவைக்கின்ற ஒளிமயமான
மெழுகுதிரி நீயே அம்மா.


ந.தர்சிகன்
தரம் : 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்கூட ஆலமரம்

நான் இப் பாடசாலையின் நீண்டநாள் அபிமானி. எனக்கு இந்தப் பாடசாலையின் பல்வேறு விடயங்களும் அத்துப்படி. கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளும் புரியும், கணக்கு வழக்கு அறிக்கையும் தெரியும். ஒவ்வொரு ஆசிரியரதும் ஆதங்கமும் அறிந்தவன். அகவை அறுபத்து இரண்டில் அகலக்கால் பதித்து நிற்கும் இவ் வித்தியாலயத்தின் மகா மகா விற்பனங்கள், வெற்றிச்சுவடு பதித்த பெருமிதப் பதிவுகள், சோதனைச் சுவர் தாண்டிச் சாதனைக் கொடி நாட்டிய சந்தோசப் பொழுதுகள் யாவுமே நானறிவேன். ஒவ்வொரு வெற்றியிலும் அடியேனும் இறும்பூது கொள்வேன். தோல்விகளில் துவண்டிருக்கிறேன். இத்தனை சொல்கிறேனே நான் யாரென்று தானே யோசிக்கிறீர்கள். நானா? நான்.. நான் பாடசாலையில் பெருங்கிளை பரப்பி பசிய இலைகளால் அலங்கரித்து அழகு கொழிக்க விளங்கும் நான் ஓர் ஆலமரம். என்ன? ஓர் ஆலமரமா கதைப்பது என்று அலுத்துக் கொள்கிறீர்களா? இதென்ன நியாயம்? குளத்தங்கரை அரசமரம் கதை சொன்னால் மட்டும் கேட்பீர்கள். கதை தந்த வ.வே.சு ஐயரை தமிழ்ச் சிறுகதையின் தந்தையாகவே மகுடம் சூட்டுவீர்கள். ஆனால் இந்தப் பள்ளிக்கூட ஆலமரம் கதை சொன்னால்




கேலியா? கிண்டலா? அவருக்கு மகுடம் எனக்கு?

நானும் கதை சொல்வேன். என் கதையும் சொல்வேன். என் கல்லூரியின் கதையும் சொல்வேன். நான் அழகு நிறைந்தவள். காலையிலே கதிரவனின் பொற்கிரணங்கள் என் இலைகளை அணைத்துத் ரசவாதம் செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்தையிலே சிந்தை மயக்கும். நிலத்திற்கு நிழற்குடை பிடித்து அழகு சேர்க்கிறேன் நான்.

எனக்கு தமிழ்ப்பாடம் அத்துப்படி. சிறுகதை எழுதுவேன், நாடகம் நடிப்பேன், கவிதைகள் புனைவேன், பரீட்சை எழுத ஆசை. ஆனால் என்னால் பரீட்சை எழுத முடியாது. வருத்தம் தான். சர்வதேச மொழியாகிய ஆங்கிலம் கொஞ்சம் தெரியும். கடினமான கணிதத்திலும் நான் புலி. அழகியல் பாடங்களில் நான் நிபுணி. விஞ்ஞானத்தின் விந்தைகளை அறிந்தவள். புவியியலில் அகலக்கோடு, நெடுங்கோடு அத்தனையும் மனப்பாடம். இவை எல்லாம் எப்படித் தெரியும் என நினைக்கிறீர்களா? ஆசிரியர்கள் கற்பிக்கும் போது உளவு பார்த்திருக்கிறேன்.

"ஒரு பாடசாலையை திறவுங்கள்

ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படும்"

என்பார்கள். ஞானிமட சிறார்களுக்கு இப்பாடசாலை ஒரு வரப்பிரசாதமே. 2003ம் ஆண்டு வரை தரம் 5 வரை இருந்த பாடசாலை 2003 இற்குப் பின்னர் தரம் 9 வரை உயர்வு பெற்றிருக்கிறது.

2007ம் ஆண்டு கடுமையான போர் நடவடிக்கைகளின் போது என்னுடைய மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள் இங்கில்லை ஆனாலும் நான் இப்பாடசாலையின் காவலாளி. சீருடையினர் அணி வகுத்துச் செல்வார்கள் நான் பயந்ததில்லை. என் வேலையை செவ்வனே செய்தேன். போரால் இடப்பெயர்வு துன்பம் தான் ஆனாலும் மனநிறைவு. ஏனெனில் என் குழந்தைகள் கல்வி பயிலும் பாடசாலையின் காவலாளியாக இருந்தமையே. போர் ஓய்ந்ததும் 2010ம் ஆண்டு மீண்டும் பாடசாலை உதயமாகியது. தலைமைத்துவ மிடுக்குடன் எனது பாடசாலை முதல்வி பாடசாலையை ஆரம்பித்தார். எனது மாணவர்கள் மீண்டும் என் பாடசாலைக்கு வருகைதரும் போது பாடசாலை வரவேற்பாளனாக இருந்து அவர்களை வரவேற்றேன்.

"அன்ன சரித்திரம் ஆயிரம் கட்டுதலிலும் ஆங்கோர் ஏழைக்கெழுத்தறிவித்தல் மேலானது" என்றும் "வீதிதோறும் இரண்டொரு பள்ளி" அமைய வேண்டும் எனவும் பாரதி முழங்கினான். இதற்கேற்ப கிளி.ஃஞானிமடம் அ.த.க பாடசாலை பல கல்வி மான்களையும், பட்டதாரிகளையும், பல நல்லாசிரியர்களையும் காலம் தோறும் தோற்றுவிக்கின்ற ஒரு முன்னணிப் பாடசாலை என்பது கண்கூடு. இக் கிராமத்திலே கல்விச் செல்வமும் என்னைப் போல் பெரு விருட்சமாக வரவேண்டுமென்பதே எனது அவா.

2011ம் ஆண்டு இப்பாடசாலை அகவை அறுபதில் தனது வைரவிழாவைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடியது. என் மாணவர்கள் கற்கும் பாடசாலை வைரவிழாவைக் கொண்டாடுகிறது என நினைக்கும் போது என் உள்ளம் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியது. பாடசாலைக்கு பல பெரியார்கள் வைரவிழா ஆசியுரையை வாரிவழங்கினார்கள்.

எமது பகுதியில் மின்சாரம் இல்லை. ஆனால் எமது மாணவர்களுக்கு உள்ளொளி ஏற்றுவதற்காக இப்பிரதேசத்திலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் வந்து ஆசிரியர்கள் அயராது உழைத்துக் கொண்டு இருக்கின்றமையை நான் நன்றியுடன் பாராட்டுகின்றேன். எனது பாடசாலை முதல்வி சிறந்த ஆசிரியர்களுக்கான "பிரதீபா பிரபா" விருதை 2011" ஆண்டு பெற்றார்.

எனது பாடசாலை பூநகரிப் பிரதேசத்தில் பல பாடசாலைகள் இருந்தும் கூட விளையாட்டுப் போட்டிகள், ஆங்கில தினப் போட்டிகள், நாடகப் போட்டிகள், தமிழ்த்தினப் போட்டிகள் போன்றவற்றில் முன்னணி வகித்து வருகிறது. ஞானிமட பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் வித்தியாலயத்தில் நடைபெறும் அனைத்துக் கல்வி கலாச்சார நிகழ்வுகளையும் பிரதேச மாவட்ட மட்டத்திற்கு கொண்டு சென்று பரிசில்களும் பெற்று வருவதை நான் என் இரு கண்களினுடாகப் பார்க்கிறேன்.

சென்ற வருட புலமைப்பரிசில் பரீட்சையில் எத்தனையோ பெரிய பாடசாலைகளை விட கோட்டமட்ட நிலையில் என் நிழலில் வளரும் இப் பாடசாலை மாணவி முதலிடம் பெற்றிருக்கிறார். ஆனாலும் கவலை. இன்பமும் துன்பமும் கலந்தது தானே வாழ்க்கை. மாவட்ட வெட்டுப்புள்ளியை எட்டுவதற்கு ஒரு புள்ளி பற்றாக்குறை மாணவிக்கு கவலை. மாணவிக்கு மட்டுமா? கவலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் அனைவர்க்குமே கவலை. அதற்கு மேல் என் நிழலில் கல்வி பயின்ற அம்மாணவியை நினைக்கும் போது தாங்க முடியாமல் இருக்கிறது.

சோழர் காலத்தில் தமிழ் இலக்கிய வரலாற்றை பொற்காலம் என தமிழாசிரியர் கற்பித்ததை நான் கேட்டிருக்கிறேன். சென்ற வருடம் நான் நிழல் பரப்பி நிற்கின்ற பாடசாலையின் வரலாற்றிலும் ஒரு பொற்காலமே. என் நிழலின் கீழ் கல்வி பயின்ற மாணவர்களுக்கு பிரமாண்டமான ஒரு கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. மாணவர் கற்றல் செயற்பாட்டிற்கான வகுப்பறை கணனிக்கூடம், ஆசிரியர் ஓய்வு இல்லம், சிற்றுண்டிச்சாலை வேறும் பல பல பில்லியன் ரூபா முதலீட்டுடன் நிறைவடைய இருக்கிறது. என் நிழலில் கல்வி பயின்ற மாணவர்கள் கட்டிடத்திற்குள் செல்ல இருக்கிறார்கள். அவர்களுடைய மழலை மொழி அவர்கள் கதைப்பதை ஒட்டுக் கேட்கும் ஆவல், ஆசிரியர் கற்பிக்கும் நுட்பத்தைப் பார்க்கும் ஆவல், அதிபரின் தலைமைத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி இவை அத்தனையையும் நேரடியாக பார்த்தேன். இனி தொலைநோக்கி மூலம் 25அ என் பார்வையை அகலிக்க வேண்டும்.

“சிறுதுளி பெருவெள்ளம்” என்பது போல சிறு பாடசாலையாக இருந்த பாடசாலை சென்ற ஆண்டு கா.பொ.த (சா.த) வரை தர நிலையிலே உயர்வு பெற்றிருக்கிறது. முதற்தடவையாக டிசம்பர் மாதம் தற்போதய சிரேஷ்ட மாணவர்கள் கா.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுத இருக்கிறார்கள். இதை விட தேசிய மட்டச் சாதனை, புலமைப்பரிசில் அடைவு மட்ட எழுச்சி, தரம் 09 மாகாணமட்டப் பெறுபேறு என்பன சுட்டிக்காட்டத்தக்க வகையில் உயர்வு பெற்றிருக்கிறது.

“தொட்டனைத்(து) ஊறும் மணல் கேணி மாந்தர்க்கு

கற்றனைத்(து) ஊறும் அறிவு”

மணல் கேணியில் தோண்டிய அளவுக்குத்தக்க நீர் ஊறும். அது போல, கற்ற அளவுக்குத் தக மக்களுக்கு அறிவு வளரும் என அதிபர் காலைப் பிரார்த்தனையில் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன்.

எனது பிள்ளைகள் பாடசாலை மட்டத்தில் இருந்து தேசிய மட்டம் வரை கால்பதித்து நிற்கிறார்கள் என்பதையிட்டு அகமகிழ்வு அடைகிறேன். தேசிய மட்டம் என்றவுடன் நான் ஏதோ புழுகுவதாக நீங்கள் நினைக்கிறீர்கள். இதோ தங்களுக்கான ஆதாரம். சமூக விஞ்ஞானப் போட்டியில் செல்வி ச.சயிந்தா மூன்றாம் இடம் பெற்றதை நீங்கள் அறியவில்லையோ? சாதனையும் மகிழ்ச்சியையும் தான் என்னால் சொல்ல முடியும் என நினைக்கிறீர்கள் அப்படியல்ல வேதனையையும் என்னால் புரிய முடியும்.

பாடசாலைக்கு பல்வேறு வசதிகள் இருந்தும்கூட மைதானமொன்று இல்லாமையே கவலைக்குரிய விடயமாகும். மைதானத்தையும் தந்துதவினால் பாடசாலைக்கு பெரும் நன்மையைத் தரும்.

சென்ற வருடம் மாணவர்கள் தென்னிலங்கையைப் பார்வையிட களச்சுற்றுலா ஒன்றை மேற்கொண்டார்கள். அவர்கள் செல்லும் போது எனக்கு கை அசைத்துச் சென்றதை நான் என்றும் நினைவு கூறுகிறேன். என் மாணவர்கள் புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலை, கட்டுநாயக்கா விமான நிலையம், அல் மாளிகை, தலதா மாளிகை போன்ற பல்வேறு முக்கியம் வாய்ந்த இடங்களுக்கு சென்றார்கள் என்று அவர்கள் கூறியதைக் கேட்டு நானும் அவர்களுடன் சென்றிருக்கலாமே என ஆசைப்பட்டேன். ஆனால் என்னால் அது முடியாமல் போய்விட்டது.

“நன்றி மறப்பது நன்(று) அன்று நன்றல்ல(து)

அன்றே மறப்பது நன்று”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார் வள்ளுவர் பெருமான். அவற்றிற்கிணங்க பாடசாலை கேற் போடும் போது என் ஒரு கிளை வெட்டப்பட்டது. ஆனால் என்னைத் தறிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. நான் செய்த உதவியை அவர்கள் மறக்கவில்லை என்பதை நினைக்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது. என் ஒரு கிளை வெட்டப்பட்டாலும் மறு கிளையால் பெரு விருட்சமாக நிற்கின்றேன். அடுத்த பிறப்பு என்று ஒன்றிருந்தால் அது மனிதப் பிறப்பாக இருக்க வேண்டும். இப் பள்ளிக்கூட மாணவிகளைப் போல வெள்ளைச் சட்டை போட்டு கல்வி கற்க ஆசைப்படுகிறேன்.

இப் பாடசாலை இன்று தனது 62 வது அகவையைக் கொண்டாடுகின்றது. இதனை இட்டு பள்ளிக்கு வாழ்த்துக்களை வாரி வழங்குகிறேன். இனிவரும் காலங்களில் எனது இப் பாடசாலையானது உயர்கல்வியைக் கற்கும் அளவிற்கு வளர வேண்டும் என்றும் தனது சேவையைத் திறம்படச் செய்து வரும் அதிபருக்கும், அதிபரின் சேவை வளர ஒத்துழைப்பு வழங்கும் ஆசிரியர்கள், பிள்ளைகள், பெற்றோர்கள் அனைவர்க்கும் இவ்வாண்டு விழாவைக் கொண்டாடும் இந்நாளிலே இறைவன் அருட்கடாட்சம் கிட்டி மேலும் வளர வேண்டும் எனக்கூறி வாழ்க வாழ்க என வாழ்த்துகிறேன்.

"குஞ்சி அழகும் கொடுத்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு"

எனக்கு தலைமுடி இல்லை, மஞ்சள் பூசுவதில்லை, சேலை நான் உடுப்பதில்லை. இவ்வளவு சொல்வதற்குப் பாக்கியம் கிடைத்திருக்கிறதே இதுவே நான் செய்த பெரும் புண்ணியம்.


நான் தான் பள்ளிக்கூட ஆலமரம்.

முற்றும்

ச.சமித்ரா
தரம் : 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறந்த செயற்பாட்டிற்காக நற்சிந்தனைகளை வளர்த்துக்கொள்வோம்

வாழ்க்கை வளம் பெற எமது உடலும் உள்ளமும் சீராகக் காணப்பட வேண்டும். சுகாதாரமான செயற்பாடுகள் உடலை சுத்தப்படுத்துவது போல, நற்சிந்தனைகள் உள்ளத்தை சுத்தப்படுத்துகின்றன. "சிந்தனை" என்பது தனக்குத் தானே உருவாக்கிக் கொள்ளும் மனப்பான்மை ஆகும். இது கல்வியினால் அல்லது அனுபவத்தினால் பெறப்பட்டதாக இருந்தாலும் கூட, அது எமக்குக் கெடுதலை உண்டாக்குவதாக காணப்படக்கூடாது. மாறாக, சிந்தனையானது, எமக்கு வழிகாட்டுவதாகவும் காணப்பட வேண்டும். ஏனெனில், எமது சிந்தனைகள் யாவும் நற்சிந்தனைகளாகக் காணப்படின், எம்மை எநடதவித குழப்பமும் அணுகாது. நற்சிந்தனைகளே எமது நடத்தையை சீர் செய்து வாழ்வை சீர்படுத்தும். அத்துடன் மாணவர்களைப் பொறுத்தவரையில், நல்ல சிந்தனைகள் கொண்ட மாணவர்கள் எப்போதும் உடல், உள ரீதியாக ஆரோக்கியமானவர்களாகக் காணப்படுவார்கள். அத்தடன், அவர்களது நற்சிந்தனைகளைப் போன்றே, செயற்பாடுகளும் நன்றாகவே அமைந்திருக்கும். நல்ல சிந்தனைகள் நெகிழ்ச்சியான நடத்தையையே உருவாக்கும். இதனால், சுதந்திரமாகவும் எமக்கு ஏற்றவாறும் எமது உள்ளத்தை செயற்படுத்த முடியும். சீரான கற்றலுக்கு நற்சிந்தனைகள் மிக அவசியம். நற்சிந்தனை மனதில் இருந்தால் மனதில் நெருக்கடி நிலை இருக்காது. இதனால் நீண்ட நேரம் கற்கவும் கற்றதை நினைவில் வைத்துக் கொள்ளவும் அதனை இலகுவாக மீள்நினைவுக்குக் கொண்டு வரவும் முடியும். ஆகவே, ஒவ்வொரு மாணவரும் தமது சிந்தனைகளை நற்சிந்தனைகளாக அமைத்துக் கொள்ள வேண்டும். அதுவே, நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் ஒளிமயமாக்கும்.

பா. டயானி
தரம் : 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு

**கதை**

வேணு எனும் சிறுவன் வசித்து வந்தான். அவனுக்கு நாயும், குரங்குமே நல்ல நண்பர்கள். அவர்கள் மூவரும் அடுத்த ஊருக்கு செல்ல முயற்சி செய்தார்கள். அடுத்த ஊருக்குச் செல்ல வேண்டும் எனின் ஆறு ஒன்றைக் கடக்க வேண்டி வரும். என்ன செய்வது என்று பலமுறை முயற்சி செய்து விட்டுத்திரும்புவார்கள். ஒரு நாள் தாங்கள் எப்படியாவது பயணத்தை முடிக்கவேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டனர். ஓடை அருகில் சென்றனர். ஆறு ஏனோ அன்று சற்றுப்பெருக்காக இருந்தது. ராசா என்ற நாய் முதலில் வேணுவை ஏற்ற முயற்சித்தது. வேணுவோ முதலில் தன்னை ஏற்ற வேண்டாம் ராமு என்னும் குரங்கை ஏற்றிச் சென்று கரைசேர்க்கச் சொன்னான். ராஜாவும் அப்படியே ராமுவைத் தன் முதுகில் ஏற்றிக்கொண்டு நீந்திக் கரைசேர்ந்தது. திரும்பி வரும் வேளையில் ஆறு மிகவும் பொங்கிப் பெருக்காக காணப்பட்டது. ராஜாவால் நீந்தி வேணுவிடம் திரும்பி வரமுடியாது வேறு திசைக்கு இழுத்துச் செல்லப்பட்டது. வேணுவோ தனியாக கரையில் நின்று அழுது புலம்பினான். இவ்வாறு மூவரும் வெவ்வேறு திசைகளில் வாழவேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டது. துன்பம் தாங்கமுடியாத ராமுவோ தான் இப்படி வாழ்வதை விடத் தூக்கில் தொங்கி இறக்கலாம் என்றெண்ணி கயிற்றுடன் சென்று ஆலமரத்தில் ஏறியது அப்போது வழியால் வந்த வழிப்போக்கன் ஒரு வழியாக ராமுவைத் திசைமாற்றி தன்னுடன் அழைத்துச் சென்றுவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேணுவும் நண்பர்களைப் பிரிந்த சோகத்தினால் நடந்து நடந்து வேறு ஓரிடம் சென்று புதிய வீட்டில் வாழலானான். வேணுவை வைத்திருந்த வீட்டுக்காரர் சுற்றுலா சென்றனர். தங்களுடன் வேணுவையும் அழைத்துச் சென்றனர். சுற்றுலாவில் குரங்குக்கூட்டத்தையும் பார்வையிட நேர்ந்தது. குரங்குகளைக் கண்டவுடன் தான் நண்பர்களாக இருக்கும் வேளையில் பாடிய பாடலைப் பாடினான். அக் கூட்டத்திலிருந்த ராமு வேணுவை இனங்கண்டு அவனுடன் இணைந்து கொண்டது. அவ்வாறு வேறுஇடம் இருவருமாகச் சென்று கொண்டிருந்த வேளை நாயைக்கண்ட வேணு தனது ராஜாவைப்போல் இருக்கின்றது என் ராஜாவாக இருக்குமோ என்றெண்ணி அருகில் சென்றதும் ராஜா ஓடி வந்து இருகாலையும் தூக்கி வணக்கம் சொல்வது போல் குரைத்தது. அவர்கள் மூவரும் இணைந்த சந்தோசத்தில் பாடியாடி மகிழ்ந்தனர்.

இப்படி இருக்கும் வேளை வேணுவைத்தேடி வந்த துப்பாக்கிதாரிகள் வேணுவைத் தூரத்திலிருந்தே குறிவைத்தனர். இதனை வேணு காணவில்லை. அதைக் கண்ட ராஜா பதுங்கி பதுங்கிச் சென்று அவரின் மேல் பாய்ந்து கடித்துக்குதறியது. அடுத்தவனை ராஜாவும், ராமுவும் தாக்கினார்கள். இருவரும் இறந்துவிட்டனர். மூவரும் சந்தோசமாகத் தமது காலத்தைக் கழித்தனர்.

றெ.ஷரகவன்
தரம் : 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதை

தீக்குளித்துச் சாகிறவன் காற்றுக்குளித்தும் சாவான் அவன் யார்?

**கற்பூரம்**

மின்சாரம் இல்லாவிடினும் இரவில் ஒளிரும் விளக்கு அது என்ன?

**சந்திரன்**

சீருடையற்ற காவலாளி, சம்பளம் கேட்காத காவலாளி அவன் யார்?

**நாய்**

சில்லறைக்காசை எண்ணமுடியாது, தாள் காசை மடிக்க முடியாது அது என்ன?

**நட்சத்திரமும் வானமும்**

சுண்டிவிட்டால் இரத்தம் வராது ஆனால் வெற்றி, தோல்வி வரும் அது என்ன?

**நாணயம்**

ஓட்டை வீட்டையா ஓரடி ஏறினால் நான்கடி சறுக்குவார் அவர் யார்?

**நத்தை**

தன்வாயில் ஊட்டிவிடும் உணவை ஜீரணம் செய்யாது வைத்திருப்பான் அவன் யார்?

**தபாற்பெட்டி**

ஊரூராய் சென்று வாசலில் செய்தி சொல்வான் அவன் யார்?

**தபால்**

கண்ணால் காண முடியாது, கையால் தொடமுடியாது, அவனில்லாத இடமில்லை. இருக்கும் இடத்தைத் நிரப்பிடுவான் அவன் யார்?

**காற்று**

தன்னிடத்தில் வருபவனைத் தன்னைப் போல் மாற்றிடுவான் அவன் யார்?

**பால்**

**சரவணபவான் டிலக்சன்**
**தரம் : 06**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மரம்

மழைய நம்பி ஏலேலோ
மண்ணிருக்க அயிலசா
மண்ணை நம்பி ஏலேலோ
மரமிருக்க அயிலசா
மரத்தை நம்பி ஏலேலோ
கிளையிருக்க அயிலசா
கிளையை நம்பி ஏலேலோ
கொப்பிருக்கு அயிலசா
கொப்பை நம்பி ஏலேலோ
இலையிருக்க அயிலசா
இலையை நம்பி ஏலேலோ
பூவிருக்கு அயிலசா
பூவை நம்பி ஏலேலோ
பிஞ்சிருக்கு அயிலசா
பிஞ்சை நம்பி ஏலேலோ
காயிருக்க அயிலசா
கனியை நம்பி ஏலேலோ
நானிருக்க அயிலசா
என்னை நம்பி ஏலேலோ
நீயிருக்க அயிலசா
உன்னை நம்பி ஏலேலோ
நானிருக்கன் அயிலசா
அயிலசா ஏ அயிலசா

ஜெ.தர்மிகன்
தரம் : 04



# மக்கள் மனதை மகிழாதோ



காலையில் உதிக்கும் சூரியனே.
கதிரவன் என்ற பெயரோனே.

மழையினைத் தந்திடும் சூரியனே.
நீ மாலையில் மட்டும் மறைவதேன்

கோள்களுக்கு எல்லாம்
தலைவனாய்
கோள்களில் பெரிய சூரியனே.
பாரினைச் சுற்றி வருவதால்
பானு என்ற பெயர் பெற்றாயே.
பல உயிர்களுக்கு உதயவனே
பாரினிலே உலாவருவாயே

விண்ணில் உலாவரும்
விண்மணியே
ஒரு முறை மண்ணில் வாராயோ
மண்ணில் மட்டும் நீ வந்தால்
மக்கள் மனமும் மகிழாதோ.

ல.லக்சிகா
தரம் : 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகநீதி கூறும் நன்னெறிகள்

1. கல்வி பயிலாமல் ஒருநாளும் இருக்கக் கூடாது.
2. யார் மீதும் அவதூறுகள் சொல்லக் கூடாது.
3. பெற்ற தாயை ஒரு நாளும் மறக்கக் கூடாது.
4. போகத் தகாத இடங்களுக்குப் போகக் கூடாது.
5. ஒருவர் நம் முன் இருக்கும் பொழுது புகழ்ந்து கூறிவிட்டு அவர் சென்றதும் அவரைப் பற்றி குறை கூறக் கூடாது.
6. வஞ்சனை செய்பவர்களோடு சேரக் கூடாது.
7. மனம் அறிந்து வீணாகப் பொய் சொல்லக் கூடாது.
8. நற் பண்பு இல்லாதவரோடு சேரக் கூடாது.
9. அடுத்தவரை ஒரு போதும் கெடுக்கக் கூடாது.
10. மனம் போன போக்கிற்கு போகக் கூடாது.
11. பகைவனை உறவினன் என்று நம்பக் கூடாது.
12. செல்வந்தேடி உண்ணாமல் பத்திரப்படுத்தி வைக்கக் கூடாது.
13. பிறர் செய்யும் தருமத்தை ஒரு போதும் கெடுக்கக் கூடாது.
14. கோபம் உண்டாக்கி அதனால் துன்பம் படக் கூடாது.
15. முற் கோபக்காரரோடு பழகக் கூடாது.
16. குறையை பெரிதாக சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.
17. கொலை, களவு செய்பவரோடு சேரக் கூடாது.
18. அறிஞர்களை ஒரு நாளும் பழித்துப் பேசக் கூடாது.
19. ஆட்சி செலுத்துபவர்களிடம் எதிர் வாதம் செய்யக் கூடாது.
20. கோயில் இல்லாத ஊரில் வசிக்கக் கூடாது.
21. மனைவி மீது குற்றம் கூறிக் கொண்டிருக்கக் கூடாது.
22. வம்பு பேசுவோர் வாய் பார்த்து அவர் பின்னே அலையக் கூடாது.
23. தன்னை மதிக்காதவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற்கு செல்லக் கூடாது.

24. தன்னைவிட மூத்தவர்கள் சொல்லுகின்ற அறிவுரைகளை மறந்துவிட கூடாது.

25. சிந்தித்து பார்க்காமல் எதையும் செய்யக் கூடாது.

26. ஏழ்மையானவர்களிடம் பகைமை பாராட்டக் கூடாது.

27. சேர தகுதி இல்லாதவர்களோடு சேரக் கூடாது.

28. தனக்கு உதவி புரிந்தோரை ஒரு போதும் மறக்கக் கூடாது.

29. உறவினரை அவமரியாதையாகப் பேசக் கூடாது.

30. காணாததைக் கற்பனை செய்யக் கூடாது.

31. அடுத்தவர் மனம் நோக எதனையும் கூறக் கூடாது.

**தர்மிகா**
**தரம் : 10**

## வள்ளலார் அருளிய தவிர்க்க வேண்டிய சில பாவங்கள்




1. நல்லோர் மனதை நடுங்கச் செய்வது பாவம்
2. வலிய வழக்கிட்டு மானம் கெடுப்பது பாவம்
3. தானம் கொடுப்போரைத் தடுப்பது பாவம்
4. மனமொத்த நட்பிற்கு வஞ்சகம் இழைப்பது பாவம்
5. ஏழைகள் வயிறு எரியச் செய்வது பாவம்
6. பசித்தோர் முகத்தை பாராதிருப்பது பாவம்
7. குருவை வணங்கக் கூசி நிற்பது பாவம்
8. ஊண் சுவை உண்டு உடலை வளர்ப்பது பாவம்
9. தவம் செய்வோரைத் தாழ்த்திப் பேசுவது பாவம்
10. தாய், தந்தை மொழியை தட்டி நடப்பது பாவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Affection And Interaction Among Students
## மாணவர்களுக்கிடையிலான அன்பும் தொடர்பும்




Thus heading explores the friendship, liking and loving among students.

இக்கட்டுரையின் நோக்கமானது நட்பு, விரும்புதல், காதலிக்கப்படல் போன்ற பதங்களை இயன்றவரை விளங்கிக்கொள்ள முயற்சித்தலும் அதன் வகைகளை ஆராய்தலும் ஆகும். மாணவர்கள் தங்களுக்கிடையே Decent ஆக Behave பண்ணுவதற்கும் pleasing personalities உடையவர்களாக இருப்பதற்கும் மேற்கூறிய பதங்களை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.

### Friendship நட்பு

Friendship is a blessing at the school level. ஏனென்றால்? அது உங்களுக்கு நண்பர்களை பெற்றுக் கொடுக்கின்றது. நட்பு என்பது செல்வம் போன்றது. சில நண்பர்களுடன் எப்படியும் பழகலாம் என்று இருக்கும். ஆனால் சில நண்பர்களுடன் இப்படித்தான் பழக வேண்டும் என்று இருக்கும். அவ்வாறான நண்பர்களை முதலில் அடையாளம் காணவேண்டும். friendship இற்கு பல படிகள் உண்டு.

1. Identification அடையாளம் காணல்
2. orientation சூழ்நிலைக்குத் தக்கபடி அமைதல்
3. Focus - இலக்கு / கவனம் செலுத்துதல்
4. Regulation பிரமாணம் / விதிமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்பு என்பது சுக துக்கங்களை பகிரவும் எதிர்பார்ப்பின்றி உதவுவதற்குமான ஒரு Device மாதிரி.

உண்மையில் ஒருவரின் நட்பு எமக்கு வேண்டும் எனில் அவரை நாம் கவர (Bewitching) வேண்டும். அவரை பாதிக்காத வகையில் நாம் ஏதாவது செய்ய வேண்டும். இரண்டு பேருக்கு இடையில் உள்ள உள்ளகத் தொடர்பை தொடங்குவதற்குமான இன்னொரு அணுகுமுறை உணர்ச்சி பூர்வமான அணுகுமுறை (Sentimental approach) ஆகும். பொதுவாக ஒருவரின் நட்பு நமக்கு தேவையெனில் நாம் அவர்களால் விரும்பப்படல் வேண்டும். விரும்பப்படல் பின்வரும் காரணிகளால் ஏற்படலாம். ஆர்வத்துடனும் அக்கறையுடனும் பழகுதல், திறந்த மனதுடன் தனிப்பட்ட ரீதியில் கதைத்தல், நண்பரின் மனதிற்கு இசைந்து, வளைந்து கதைத்தல், நம்பிக்கையாகவும் சுயநலமின்றியும் பழகுதல் மற்றும் நகைச்சுவையாகவும் கதைத்தல்.

விரும்பத்தக்கதும் அன்பு செலுத்தக்கூடியதும்

Like ability and love ability

அடுத்து விரும்பப்படுதலும், காதலிக்கப்படுதலும் இவ்விரண்டும் வேறுபாடானது. இவை இரண்டும் அதி உணர்ச்சியுள்ள மனோபாவங்களின் வடிவங்களாகும். இரண்டும் அளவில் (sentimental forms) வேறுபட்டவை. காதலித்தல் மனோபாவமானது விரும்பப்படலைவிட அளவில் தீவிரமானது. அதாவது உணர்ச்சி அளவில் தீவிரமானது. நாளடைவில் விரும்புதல் காதலிக்கப்படலாம். காதலிக்கப்படாதும் போகலாம்.

காதலில் பலவகை உண்டு.

1. Romatic love Intense physiological arousal இது தீவிர உடற்றொழில் பல கிளர்கையினால் ஏற்படுவது.
2. Pragmatic love முதிர்ந்த வயதுகளில் ஏற்படுகின்ற புரிந்துணர்வான காதல்.
3. Familial love குடும்ப அங்கத்தவர்களிடையே ஏற்படுவது.
4. Hyper commitment உயர்ந்த ஸ்தானங்களில் இருப்பவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுவது.

5. Infatuation - இனம் புரியாத இளவயதில் ஏற்படும் முட்டாள்தனமான காதல்

இன்று காதலில் ஏற்படுகின்ற பிரச்சனைகளுக்கெல்லாம் மிக முக்கியமான காரணம் கசயபடைடந நபழ ஆகும். நுபுமு என்பது நுனபலைபெ மூக புழன மூரவ இவ் நுபுமு ஐ அகற்ற ஒரே வழி எதிர்பார்ப்பின்றி விட்டுக்கொடுப்பதில் இருவரும் போட்டி போட வேண்டும். காதலின் வெற்றியானது விட்டுக்கொடுப்பதிலேயே தங்கியுள்ளது.

**ச.சாலினி**
**தரம் : 10**

# நான்தான்

நல்ல மாணவி நான்தான்
நீங்கள் விரும்பும் சிறுமியும் நான்தான்
துள்ளி விளையாடும் கன்றுக் குட்டியும் நான்தான்
சுறுசுறுப்பாய் வளரும் பெண்ணும் நான்தான்

இனிய குரலில் பாட்டுப்படிக்கும் குயிலும் நான்தான்
இனிமையாக பேசும் கிளிப்பிள்ளையும் நான்தான்
சிறகு விரித்து ஆடும் மயிலும் நான்தான்
உண்மை பேசும் அரிச்சந்திரனும் நான்தான்

**ஆக்கம்**
**லோ. ரசிகா**
**தரம் : 02**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் விட்டு நீங்காத எம் கல்லூரி

தேனீக்கள் தேனுக்காக பூக்கள் தேடும் -
நாம்
கல்விக்காக கல்லூரி எனும் பூந்தோட்டம்
நாடினோம்
ஆண்டொன்றில் அமுத பிள்ளையாய் கால்
வைத்த - நாம்
ஆண்டுகள் நகர நகர அறிவின்
சிகரங்களாய்
வளர்வதற்கு வித்திட்டது எம்
கல்லூரி எனும் பூந்தோட்டமே.

கல்லூரி எனும் பூந்தோட்டத்திலே
கடுகு விதை போல அறிமுகமானோம்
இன்று பலன்கள் கொடுக்க
காத்திருக்கும் பெரு விருட்சமானோம்.

கடகடவென காலங்கள் கடந்திட
கல்வியினால் எமதறிவும் பெருக்கிடவே
கண்ணாமூச்சி விளையாட்டும் குறுக்கிட்ட
கடந்தகால கல்வி வாழ்வை
மீளப்பார்க்கிறோம்.

சமத்துவமாய் வாழ வைத்தாய்
தத்துவங்கள் பல சொல்லித்தந்தாய்
தலைமைத்துவத்தை கற்றுத்தந்தாய்
எத்தவம் புரிந்தோம் இவற்றை பெற

சோதனைகள் பல தந்தாய்
வேதனைகளோடும் வாழப்பழகினாய்
சாதனையாளர்களாய் மாற்றினாய் - இன்று
இத்தனைக்கும் காரணம் நீயே

நண்பர்களை அறிமுகம் செய்தாய்
நன்மை தீமை அறிய வைத்தாய்
நற்பிரஜையாய் உருவாக்கினாய்
நாளைய உலகில் வாழ நம்பிக்கை
தந்தாய்

அன்பான வழிகாட்டலோடு அறிவூட்டி
பண்பான மனிதர்களாக எம்மை
மாற்றினாய்
காலங்கள் மாறிவிட்ட போதும் -
கற்றுத்தந்த
கல்வியும், ஒழுக்கமும் என்றும் பதிவானது
எம் உள்ளத்தில்

கற்பித்து வழி காட்டிய ஆசான்களையும் -
உலகில்
காலூன்றி நிற்க வைத்த கல்லூரியையும்
கடைசி சுவாசம் எம் உடல் விட்டு
கரையும் வரை மறவோம்

அறிவின் பெரு விருட்சமாய் வளரட்டும் -
எம் கல்லூரி
என்றென்றும் அன்பான ஆசான்களுடன்
பண்பான
மாணவர்களுடன் !


வாழ்த்துக்களுடன்
வி.விந்துஜன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரம் பொன்னானது

நேரம் பொன்னானது
அதற்கு ஏற்ப நாம் திட்டமிட்டு
செயற்ப்பட வேண்டும்.
காலத்திற்காக நாம்
காத்திருக்கலாம் ஆனால்
எமக்காக காலம் ஒரு போதும்
காத்திருக்காது.



நேரத்தின் வெகுமதியை எவராலும் மதிப்பிட முடியாது. ஒரு நல்ல நன்மையான நிகழ்வாய் இருப்பினும், தீமையான சடங்காய் இருப்பினும் முதன்மை நிலையில் நேரத்தை குறித்து வைத்த பின்னர் தான் அந்த நிகழ்வு ஆரம்பதன்மையையும் முடிவுத்தன்மையையும் காணலாம்.

ஆறறிவு படைத்த மனித ஜீவன்கள் பூமியில் அவதரிக்கும் போது முதலில் நேரத்தை தான் கணக்கெடுப்பார்கள் ஏனென்றால் அந்த மனிதனின் பிறப்பு நேரத்தில் தான் அவனது வாழ்க்கையே அமைந்து காணப்படுகிறது.

நீண்ட தூரம் மரதன் ஓடுகின்ற ஓட்ட வீரனைப் போல காலமும் ஓடிக்கொண்டு தான் இருக்கிறது எந்த வேளையிலும், எந்த காலத்திலும் எமக்காக ஒரு போதும் நேரம் காத்திருக்கமாட்டாது. நாங்கள் தான் நேரத்தை திட்டமிட்டு செயற்பட வேண்டும்.

மாணவர்களாகிய நாம் நேர முகாமைத்துவத்தை பாடசாலைப் பருவத்திலிருந்தே பழகி கொள்ள வேண்டும். சரியான முறையில் எதையும் திட்டமிட்ட வண்ணம் செயற்படுவோம் ஆனால் பொன்னான நேரத்தை பிரயோசணமான முறையில் செயற்படுத்த வேண்டும்.

காலத்திற்கேற்ப நாகரீகம் மாறலாம், பொருட்களின் விலையில் மாற்றம் ஏற்படலாம். ஆனால் நேரத்தில் மட்டும் ஒரு போதும் மாற்றங்கள் ஏற்படாது. நாம் ஒவ்வொருவரும் ஒரு மழைத்துளி நேரத்தையும் வீண்விரயம் செய்யாமல் பயனள்ளதாக்கி வாழ வேண்டும்.

ந.தர்சிகா,
தரம் 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிறுகதை*

# குரு தட்சணை



புதுவருடத்திலே அன்று முதல் நாள் பாடசாலை ஆரம்பமாகிறது. மாணவர்கள் அனைவரும் உற்சாகத்துடன் பாடசாலைக்கு செல்கின்றனர். வழமை போல் காலைப்பிரார்த்தனை கூட்டம் நடைபெற்றது. இறைவழிபாட்டினை தொடர்ந்து அதிபர் பாடசாலைக்குப் புதிதாக வந்திருக்கும் ஆசிரியர் ஒருவரை அறிமுகம் செய்தார். மாணவர்கள் கரகோசத்தடன் ஆசிரியரை வரவேற்றனர். பவாணி பார்ப்பதற்கு எளிமையாகக் காணப்பட்டார். முதல் பாடத்திற்கான மணி ஒலித்தது. ஆசிரியர்கள் வகுப்பறைக்குச் சென்றனர். ஆசிரியை பவாணியும் அவருக்கு பொறுப்புக் கொடுத்த தரம் 11 வகுப்புக்குச் சென்றனர்.

வகுப்பறையிலிருந்த மாணவ மாணவிகள் ஆசிரியரை முகம் மலர்ச்சியுடன் வரவேற்றனர். ஆசிரியர் முதல் நாள் என்பதால் அவர்களுடன் உரையாடத் தொடங்கினார். ஒவ்வொரு மாணவர்களாக எழுந்து தங்களை அறிமுகம் செய்தனர். ஆனால் வகுப்பில் பின்வரிசையிலிருந்த ஒரு மாணவன் மௌனமாக இருந்தான். ஆசிரியர் அவனை எழுப்பி பெயர் என்ன? என்று வினாவ அவன் நிறோ என்று வினாவினான். அவனது முகத்தில் வாட்டத்துடனும் அழுக்கான சீருடையும் நேர்த்தியாக சீவாத தலைமுடியுடனும் காட்சி அளித்தான். ஆசிரியை பவாணிக்கு நாற்பது பேரில் இவன் வித்தியாசமாகக் காணப்பட்டான்.

நாட்கள் நகர்ந்தன நிறோ பாடத்தில் எவ்வித அக்கறையும் காட்டவில்லை ஏனைய மாணவர்களுடன் பேசுவதோ பழகுவதோ கிடையாது. ஆசிரியர் ஒரு நாள் சில மாணவர்களை அழைத்து நிறோ பற்றி கேட்டார். நிறோ ஒரு வர்த்தகனின் மகன் அம்மா 6 வருடத்திற்கு முன் இறந்துவிட்டார். நிறோவின் அப்பா மறு திருமணம் செய்து கொண்டார். அவன் யாருடனும் பேசமாட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற தகவல்களை ஆசிரியை பவாணி அறிந்து கொண்டார்.

நிறோவின் நிலைமை தற்போது ஆசிரியைக்குப் புரிந்து விட்டது. இப்படி இருக்க முதலாம் தவணைப் பரீட்சைகள் முடிவடைந்தது புள்ளியிடும் பணிகள் ஆரம்பித்தது ஆசிரியை பவாணி அலுமாரியில் இருந்து மாணவர்களின் ரிப்போட் புத்தகத்தை எடுத்து புள்ளியிட ஆரம்பித்தார். நிறோவின் ரிப்போட் புத்தகம் ஆசிரியையின் கண்ணுக்கு புலப்பட்டது. ஆசிரியர் தரம் ஒன்று தொடக்கம் தரம் பத்து வரையான பரீட்சைப் புள்ளிகள் பதியப்பட்டிருந்தன. நிறோவின் ரிப்போட்டைப் பார்த்து ஆசிரியை பவாணி அதிர்ச்சி அடைந்தார். தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரை வகுப்பில் அவன் தான் முதலிடம் தரம் ஐந்து புலமைப் பரீசில் பரீட்சையிலும் அவன் 185 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் மூன்றாவது இடம். ஆசிரியை பவாணி திறமையான மாணவனை குடும்ப நிலை பாதித்து விட்டது என்பதை உணர்ந்து அவன் மீது அக்கறை காட்ட ஆரம்பித்தார்.

வகுப்புக்கு சென்ற ஆசிரியர் நிறோ முன்னால் வந்து இரு என்றார். நிறோ தயங்கித் தயங்கி வந்து அமர்ந்தான். தற்போதெல்லாம் ஆசிரியருக்கு நிறோ வகுப்பில் பிடித்த மாணவன். இடைவேளை நேரங்களில் அவனை அழைத்து கதைப்பார். அவனுக்கு வாசிப்பதற்கு புத்தகங்களை நூலகத்திலிருந்து பெற்றுக் கொடுப்பார். வீட்டு வேலையையும் இடைவேளை நேரங்களில் சொல்லிக் கொடுப்பார். நிறோ மெல்ல மெல்ல மாற ஆரம்பித்தான். ஆசிரியையின் வழிகாட்டலுக்குப் பின்னர் அழகான சீருடை அணிந்து நேரத்திற்கு பாடசாலை வர ஆரம்பித்தான். இப்படி இருக்க ஒரு நாள் நிறோ ஆசிரியர் தினத்திற்கு ஒரு பரிசு கொண்டு வந்து கொடுத்தான். ஆசிரியை முதலில் அதனை ஆர்வத்துடன் பிரித்துப் பார்த்தார். நிறம் மங்கிப்போன பழைய கைக்கடிகாரம் நிறோ அருகில்ச்சென்று இது என் அம்மாட வோச் என்று கூறிக்கொண்டே அழுதான். ஆசிரியை நிறோவை தேற்ற முற்பட்டார். நிறோ அவனின் கவலையை ஆசிரியரிடம் கூறத் தொடங்கினான். அவனின் அம்மா அவன் மீது வைத்த பாசத்தைப் பற்றியும் சித்தி அவனை வேலைக்காரன் போல நடத்துவதைப்பற்றியும் அழுது கொண்டே கூறினான். ஆசிரியை நான் உன்னை என்னுடைய மகனாகத்தான் நினைக்கிறேன் என்றார். நிறோ கண்களைத் துடைத்த வண்ணம் ஆசிரியரின் காலில் விழுந்து வணங்கினான்.

நிறோ புதுமனிதனாக மாறினான். வகுப்பில் மற்ற மாணவர்களுடன் போட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுக்கொண்டு படிக்க ஆரம்பித்தான். விளையாட்டுப் போட்டி கலைவிழா என பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்வுகளில் பங்குபற்ற ஆரம்பித்தான். இவனின் வளர்ச்சி சில மாணவர்களுக்கு பொறாமையை ஏற்படுத்தியது. ஆசிரியர்கள் கூட வியப்படைந்தனர். தற்போது அவன் வகுப்பில் அவன் தான் கீரோ. ஆண்டு கழிந்தது க.போ.த சாதாரண தரப் பரீட்சையில் 9யு எடுத்து கல்லூரியின் முதல் மாணவனானான். உயர்தரப் பரீட்சையிலும் சிறந்த பேறுபேற்றை பெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்திற்கு தெரிவானான்.

நிறோ என்ன தான் படித்தாலும் ஆசிரியை பவாணியை மறப்பதில்லை. ஆசிரியருக்கு நிறோ என்றும் பிடித்த மாணவன். பாடசாலையில் மற்ற மாணவர்களுக்கும் நிறோவைப் பற்றி பெருமையாகக் கூறுவார். பட்டப்படிப்பை முடித்த நிறோ மேற்படிப்பிற்கு சுவிஸ் சென்றான். இருவருடங்களுக்கு பின் அவன் இலங்கைக்கு திரும்பத் தயாரானான். தனது வாழ்வில் ஒளியேற்றி வைத்த குருவுக்கு கொடுக்க என பரிசுப் பொருட்களை வாங்கினான். இலங்கை திரும்பிய நிறோ ஆசிரியரைக்கான ஆசிரியரின் வீட்டுக்குச் சென்றான். வீட்டு முற்றத்தில் அவனுடன் பாடசாலையில் படித்த நண்பர்கள் கூட்டமாக நின்றனர். அழும் குரல் கேட்டது. ஆசிரியைப் பார்க்க வந்த நிறோவிற்கு கிடைத்தது ஆசிரியை பவாணியின் சடலம் தான். நிறோ கையில் இருந்த பரிசுப்பொருட்கள் நழுவி கீழே விழுந்தது. நிறோ ஆசிரியையின் பாதத்தினை பிடித்து கதறி அழுதான். நிறோ கொண்டு வந்த பரிசுப்பொதியை அவிழ்த்து அதிலிருந்து கைக்கடிகாரத்தை எடுத்து கையில் அணிவிற்க முற்பட்டான். ஆசிரியையின் கையில் கறுப்புப் பட்டி ஒன்று அவன் கண்ணுக்கு தென்பட்டது. நிறோ உற்றுப்பார்த்தான். அதுதான் அவன் 11ம் வகுப்பில் கொடுத்த அவனது அம்மாவின் கைக்கடிகாரம் ஆகும்.

-விசுவாசமே பணத்தினும் மதிப்பு வாயந்தது-

**லோ. காத்தியாயனி**
**தரம் : 11**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையும் பிதாவும்

அன்னையும் பிதாவும் முன்னறி
தெய்வமென்று
ஔவை அருளினாள் அருள்வாக்கு
தெய்வத்தில் உயர்ந்தோர்
இருவருமென
சேவித்தல் நமது கடமையன்றோ

கருவறை தனிலே என்னைத் தாங்கி
கஷ்டங்கள் பலவாய் அவள் ஏற்று
மகவாய் எம்மையே மண்ணில் தந்த
மாதாவே என் முதல் தெய்வம்

நான் நோய் அடைந்தால்
தான் உள்ளம் தவிப்பாள்
தான் மருந்துண்டு பத்தியம் காப்பாள்
தரணியில் அவளே என் அன்னை

ஆடை அணிகள் எனக்கெனப் பூட்டி
அழகு பார்ப்பவள் என் அன்னை
பாப்பாப் பாட்டு பல சொல்லி
பாலும் சோறும் ஊட்டிடுவாள்

எண்ண வைப்பாள், எழுத வைப்பாள்
எத்தனை கதைகள் பாடல் சொல்வாள்
வண்ண வண்ண நிறங்களை
வானவில் காட்டி, கதைகள்
சொல்வாள்

துள்ளித் திரியும் போதினிலே என்
துடுக்கை யடக்கிப் பண்படுத்தி
பள்ளிக் கென்னை அனுப்பி வைக்கும்
பக்குவம் தந்தவர் என்தந்தை

எண்ணும் எழுத்தும் இருகண்களென
எழுதிப் படிக்க வழி காட்டும்
தந்தையை அறிவுக் கடலென்பேன்
அவர் தாளினை தொழுதல் என்கடனே

அம்மா காட்டும் அன்புவழி
அப்பா காட்டும் அறிவுவழி
ஒன்று சேர்தெனை உருவாக்கும்
உலகினில் சான்றோன் எனக்
காட்டும்

ஈன்றெனைத் தந்தவள் தாயானாள்
சான்றோனாக்கினை
தந்தையென்பாள்
இரு முதுகுரவரை எந்நாளும்
ஏத்திப் பணிதல் எம் கடனாகும்

கல்விக் கண்ணை திறந்து வைத்தல்
கடவுள் ஆனான் என் தந்தை
அன்பால் என்னை அரவணைத்து
அமைதி காட்டினாள் தாயானாள் -
ஆதலின்
அன்னையும் பிதாவும் முன்னறி
தெய்வங்கள்
ஔவை அருளியதை அருள்
வாக்கென்போம்

ஆக்கம்
லோ. சிவதனு
தரம் : 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஊர்

எங்கள் ஊர் சிறியது
எழில் மிகுந்த ஊரது !
எங்கும் பசுமை கொண்டது
எவர்க்கும் பிடிக்கும் ஊரது !

நான்கு பக்கம் சோலைகள்
நடுவில் நல்ல ஆலமரம் !
பாங்குடன் நிகழ்ந்திட
பசுமை ஊட்டும் ஊரது !

பூங்குயில்கள் கூவிட
புதிய காற்று வீசிட
ஓங்கி நிற்கும் ஆலமரம்
உற்ற தெங்கள் ஊரதே

நெளிந்து செல்லும் ஆற்றுடன்
நெடிய வயல்கள் காற்றுடன்
களிப்பை யுட்டி செல்லுதே

க.மதுஷன்,
தரம் 11

# பாடசாலை

நல்ல நல்ல பள்ளி
நாம் கற்கும் பள்ளி
மேல்மாடி கொண்டு
அமைந்த எம் பள்ளி
(லால..)

பாடியாடி மகிழ்ந்து
பாடம் கற்கும் பள்ளி
நானிலத்தில் அமைந்த
இனிதான பள்ளி
(நல்ல )

சான்றோர் தன்னையாக்கி
சாதனை படைக்கும் பள்ளி
பள்ளிப்புகழை ஏற்ற
பண்பாய் நாமும் வாழ்வோம்
(நல்ல..)

பு.கவியரசி
தரம் : 01

# அம்மா



ஆசையான அம்மா
அன்பாக இருப்பா

நோய்நொடியில் விழுந்தால்
நித்திரையின்றி இருப்பா

நித்தம் நித்தம் எமக்குத்
தன்சேவை புரிவா

எங்கள் உயர்வு தன்னை
ஏற்று மகிழ்ந்திடுவா


காலமுள்ள வரையில்
எம் கனவுடன் வாழ்வா

**ந. நிதர்சனா**
**தரம் : 01**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TELEVISION



The television set of familiar piece of equipment in home throughout the World. At the turn of a switch. We can sit and watch things that are happening many miles away without moving from our chairs. We can see plays and shows transmitted from special studies, we can be spectators of exciting sporting events and by means of the radio links. We can be transported in sound and vision to many different countries. It is all so completely for granted as part of our everyday lives.

The Word 'Television' is a combination of Greek and Latin words. The Greek Word tele means at a distance and it is used in other forms of long distance communication. Such as the telegram and the telephone Vision comes from the Lating word 'Video' meaning 'I see'.

Television educates us in almost all spheres of life science, nature, current events etc.

Though television has its advantages too. school children tend to neglect their school work and sit infront of television set enjoying drama and music. The action packed entertainment give the youth the encouragement to violence.

We now live in an age when television has become a necessity. The society is mounded greatly by what it sees on the screens. So its important that we learn to take what is best for us and leave out the rest.

*K.Vinoth*
*O/L 2013*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Mobile Phones*



A mobile phone is a modern device of communication. It has many functions. There are different kinds of mobile phone such as touch screen, video players, music players, cameras, visual displayers, internet etc. A mobile phone is a portable device that one can take with them where they go. The mobile phones also has a calculator, stop watch, torch, radio, television, calendar notepad and game playing device.

With the modern scientific and technological development the mobile phone has become a very essential service to both young and old in recent times. However the mobile phone has many advantages and disadvantages. It is a device that can be used at any time, anywhere and everywhere. Messages can be sent and received in a very short tmie and information around the world can be received using the internet.

Among that disadvantages are, a wastage of time for children because they neglect their studies by watching films, playing games, surfing the internet and chatting on facebook, spending a lot of time.

Therefore it has been revealed that the mobile phone is a barrier to the life of a child and children should not be allowed to use it all the time.

*V.Partheepan*
*Grade : 10*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sports and Games

Sport and games may appear a waste of time and energy to those who know nothing about sports at all. The development of a country depends on its healthy and active citizens. Sports help us to build our body and strength it. It is vital for the proper functioning of the organs. Sportsmen can be active citizens. They can play a vital role in the country's development.



Sportsmen learn how to lead and how to follow. They at time enjoy the fruits of their hard work and practice. It is possible to learn good manners, to acquire to learn and to treat defeat and success alike. children can thus learn these qualities essential for men to engage in development activities.

A high sense of discipline develops in the minds of true sportsmen. They learn good manners, gain worthy friendships self confidence and perseverance which will lead them in all walks of like as in sports.

Sports is not an end in itself. It is more than mere physical exercises or a pastime. Sports can develop the personalities of those who will in future steer the development of their nation.

*S.Sajintha*
*Grade : 09*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# My hobby



A hobby as you know helps us enjoy our free time. It brings us much joy and benefits too.
My hobby is collecting stamps. I started this hobby five years ago. At first I collected only stamps of my own country Sri Lanka. Later I got stamps of other counties too. My parents help me in my collection. I have relations and friends in many countries like England, America and Canada. So I am able to get stamps of these countries easily. I exchange stamps with my friends.
My uncle gave me a beautiful stamp album as my birthday present. I have mounted my stamps on this album. I spend one hours saturday with my collection.
I get a lot of knowledge by studing these stamps. I get to know about these countries. my mother encourages me in my hobby. Do you know why? It keeps me from naughty in the house.

*L.Sivathanu*
*Grade : 09*

# My pet



My pet is a dog. It's name is "Lucky" It's colour is black and brown. I give it bones. He can shake hands. He can jump high. He is very fair. He is an alsation. I like my dog.

*S.Komathy*
*Grade: 04*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My dream



I had a dream last night. I saw and angel The angel took me to a beautiful house. she gave me lot of food to eat. She danced around me. Many angels came to see me. They took me in the air. I was in flower garden. There was a gold rose. I went to pluck the gold rose. I like the gold rose. The angel told me not to pluck the gold rose. I obeyed her. She gave me gold rose. I bent to take it. I fell down from the bed. My mother heard the noise and woke me up.

*S.Dilani*
*Grade : 05*

# Oh! My friend

Oh! My friend.
I am living for you I love you
than an one
Friend! Your needs are my duties.
Your likings are my dreams
I can give every thing for you.
I want only one thing from you
That is a place in your heart.
You are a sweet flower
Which blossom in this world?
To spread sweetness.

*N.Tharsika*
*Grade: 09*

# The Subject I like best

I like to learn English. Our English teacher is Miss K.Vimalini. She helps us to learn English very well. English is world language. I like to read English story books. English is very importance to everyone.

*J.Tharmikan*
*Grade : 04*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My country



My country is Sri Lanka. It is island and it is in the Indian Ocean. Its capital is Colombo. There are nine provinces cand twentyfive districts in my country. There are the Sinhalease, Tamils and Muslims.

We export tea, rubber, coconut and spices. The staple food of the people is rice. Sri Lanka is a beautiful Country. The Mahaweliganga is the longest river and the Pidurutalagala is the highest mountains. Tourists visit our Country to see the beautiful sights and we earn a lot of money through tourism. The president of our country is Mr. Mahinda Rajapakcha. I love my country very much.

*S.Saranraj*
*Grade: 06*

# Last Holiday

I spend my last holiday with pleasant. I can't forget this holiday. Because It gave many experience to me. This Holiday started on December vacation.

Everyday I got up early in the morning and went to temple. Some times I went with my parents.

I watched television with my parents, sisters and brothers. At Holidays I went to Jaffna, Poonkani Park, Swimming and Nallur temple. Once a week I went to relation ship's house. In every evening I went to playground to play or paddy field.


When holiday my uncle and his family came to my home. At holiday they enjoyed with us. I helped to my family. I prepared a home garden. Every day I watered the garden. In this ways I enjoyed my holidays with pleasant

*S.Salini*
*Grade: 10*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A visit to the Zoo



One fine Sunday morning our family went to the Zoo. We left home about nine o'clock. We reached there before ten o'clock. My father bought the tickets and we entered the zoo. First we saw the cranes standing on one foot. Next we saw the fish in the tanks. We went around the zoo. We saw diffrernt kinds of animals. We saw lions, tigers, bears and different kinds of birds. At about twelve o'clock our lunch. In the evening we went to see the elephant dance. At about five o'clock. We returned home. We did enjoy ourselves very much.


*V. Ashvini*
*Grade: 07*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாடசாலை மாணவ தலைவர்களுடன் அதிபர், ஒழுக்காற்றுக் குழு ஆசிரியர்கள்-2014



பாடசாலையின் புதிய கட்டிடத்தின் பின்புறத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலையின் பௌதீகவள வளர்ச்சிப் போக்கு

இடப்பெயர்வின் பின் (2010)





இன்றைய பாடசாலையின் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற்பயிற்சிக்காகச் சில நிமிடங்கள்



உடற்பயிற்சி செய்வதனால் உடலின் இரத்தத்தின் அளவு அதிகரிக்கின்றது. உடற்பகுதிகளில் இரத்த நாளங்கள் அதிகமாக வளர்கின்றன. உடற்தசைகள் போதுமான எரிபொருளைப் பெறுவதுடன் அதனை எரிக்கத் தேவையான நொதியத்தையும் பெறுகின்றன. உடற்பயிற்சியைச் செய்வதனால் பிராண வாயுவை எடுத்துக் கொள்வது மிக எளிதாகின்றது. இதன் காரணமாக நல்ல உடல் தகுதியுள்ளவர்களாகவும் மாடிப்படிகளில் இலகுவாக ஏறவும் இறங்கவும் பல விதமான பொருட்களை இன்னோரிடத்திற்கு நகர்த்தவும் முடிகின்றது. உடற்பயிற்சி ஆரம்பித்து ஓரிரு வாரங்களில் இம் முன்னேற்றங்களைக் காண முடியும். தினமும் உடலுழைப்பில் ஈடுபடும் வகையில் எமது உடல் அமைக்கப்பட்டிருப்பது மனிதப் படைப்பின் பெருமையாகும்.

உடற்பயிற்சி உடல்வலிமையையும் உடல் ஆரோக்கியத்தைக் கொடுப்பதுமல்லாமல் மனநலத்தையும் உண்டாக்கின்றதென்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். இது யதார்த்தமான தொன்றாகும். உடற்பயிற்சியினால் உளம் தெம்படைகின்றது. கவலை, சோர்வு, மன இறுக்கம் போன்றவை இழவளவாக்கப்படுகின்றன. பொதுவாக உடல் நலம், உள நலம், விரைவாகச் சிந்தித்துத் தக்க முடிவெடுத்தல், செயற்படுதல் போன்றவை மேம்படுகின்றன என்ற உண்மையினை ஆய்வாளர்கள் கூறுகின்றனர். உடற்பயிற்சி என்பது பல்வேறு விதமான நோய்களைக் குறைக்கின்றது என்பதையும் சம்பந்தப்பட்ட ஆய்வாளர்கள் கூறத்தவறவில்லை. உடற் பயிற்சி எதையும் செய்யாமல் கை, கால்களை அசைக்காமல் உட்கார்ந்தே வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள் நல்ல போசாக்குள்ள உணவை உட்கொண்டாலும் சரியான மருத்துவக் கவனிப்புக்களைப் பெற்றிருந்தாலும் அவர்களது வாழ்வு உற்சாகமானதொரு வாழ்வாகவோ அல்லது மகிழ்ச்சிகரமானதொரு வாழ்வாகவோ இருக்க முடியாது. மாறாக வலியுடனும் துன்பங்களுடனும் தான் அவர்கள் வாழ்நாட்களைக் கடத்த வேண்டியவர்களாவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய கால கட்டத்தில் உலக மக்களைச் சாகடிக்கும் நோய்கள் எனக்குறிப்பிடக்கூடிய இதயநோய், புற்றுநோய் போன்றவற்றின் ஆபத்து நிலையினை உடற்பயிற்சி மூலம் குறைக்கலாம் என நம்பப்படுகின்றது. உடற்பயிற்சி செய்து சுறுசுறுப்பாக இருப்பவர்களைவிட உடலங்கங்களை அசைக்காமலிருந்து அசையா வாழ்வு வாழ்பவர்களுக்கு இதய நோய் இருமடங்கு அதிகம். புகைப்பழக்கம் உடையவர்களுக்கும் இரத்த அழுத்தம் உடையவர்களுக்கும் இதய நோய் இருமடங்கு அதிகம். ஆகவே நாளாந்தம் 30-60 நிமிடங்கள் வரையிலான மிதமான உடற்பயிற்சி செய்து வருதல் மிக நன்மை பயக்கும் என நம்பப்படுகின்றது. உடற்பயிற்சியானது ஒருவரின் உண்மையான முதுமை வயதுத் தோற்றத்தைக் குறைத்தே காட்டுகின்றது. "நீண்ட வாழ்நாளைப்பெற அதிகம் நடக்க வேண்டும்" என்பது நம் நாட்டு வழக்கிலுள்ள பயனுள்ள பழமொழியாகும். ஒருவருக்கு வயது ஏற ஏற அவரது இதயம், நுரையீரல் என்ற உறுப்புக்களின் இயக்கம் குறைகின்றன என ஆய்வாளர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். ஒருவரின் இருபத்தைந்து வயதிற்குப் பின்னர் மேற் குறிப்பிட்ட உறுப்புக்களின் இயங்குதிறன் ஆண்டுதோறும் ஒரு சதவீதத்தால் குறைவடைகின்றது என்பதனை மருத்துவ ஆய்வுக் குறிப்புகள் கூறுகின்றன. ஆனால் உடற்பயிற்சியில் ஈடுபடுபவர்களுக்கு இம் மாற்றம் ஏற்பட வாய்ப்பு இல்லை என்று கூறலாம். ஆண், பெண் என்ற பாகுபாடின்றி 60, 70 வயதுவரை ஆன போதிலும் உடற்பயிற்சி செய்து வந்தால் இதய, நுரையீரல் போன்றவைகளின் இயக்கம் அதிகரித்து சிறந்த உடல், உள ஆரோக்கியத்துடன் வாழலாம்.


இவ்வாறாக உடற்பயிற்சியினால் கிடைக்கின்ற நன்மை பயக்கக்கூடிய கங்கரியங்களைப் பெறுவதில் மக்கள் அனைவரும் கவனஞ் செலுத்துதல் அவசியமானதாகும். எனவே முன்பள்ளிக் கல்வி முதல் ஆரம்ப, இடைநிலை, உயர் கல்வி பெறுகின்ற காலத்தில் மாத்திரமல்லாது ஏனை தொழில்களைப் புரிகின்ற சந்தர்ப்பங்களிலும் வயது முதுமையடைந்த காலத்திலும் உடற்பயிற்சியினைச் செய்வதனால் உடல் வலிமையுடையவராகவும் உடல் ஆரோக்கியமுடையவராகவும் உள ஆரோக்கியத்துடன் மகிழ்ச்சிகரமான வாழ்வை வாழலாம் எனவே உடற்பயிற்சி செய்து மகிழ்ச்சியான வாழ்வு வாழ்வோமாக.

திரு. சி. சிங்கராசா
ஆசிரியர்
பயிற்றப்பபட்ட ஆரம்பக்கல்விSLTS 2-II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் முக்கியத்துவம்



குடும்பமும் பாடசாலையும் பிள்ளையின் ஆளுமை வளர்ச்சியில் அதிக செல்வாக்குச் செலுத்தி வருகின்னமையை அண்மைக்கால ஆய்வுகள் வலியுறுத்திக் கூறுகின்றன. "பிள்ளையைச் சமூக இயைபுடையவனாக்குவதில் மற்றெல்லாத் தாபனங்களையும் விட குடும்பம் பெரும்பங்கு வகிக்கிறதென்பர். குடும்பத்தின் ஒத்துழைப்பின்றி மிகச் சிறந்த பாடசாலையெனினும் பிள்ளையின் முழுமையான வளர்ச்சிக்கு வழிவகுக்க முடியாது. குடும்பங்களை வளப்படுத்துபவர்களும், வழிப்படுத்துபவர்களும் பெற்றோர்களே.

பிள்ளைக்கு நற்கல்வி வழங்கும் நன்நோக்கத்தோடு நல்லாசிரியரைக் கொண்டு நல்ல நேரத்தில் குலதெய்வத்தைக் கும்பிட்டு குழந்தையாகிய குலக் கொழுந்துக்கு வித்தியாரம்பஞ் செய்து வைக்கும் நாளை பெற்றோர்கள் தம்மியல்புக்கேற்ப குதூகலமாகக் கொண்டாடுகின்றனர். பிள்ளையை நீராட்டிப் புனிதமாக்கி புத்தாடை அணியவைத்து அலங்கரித்து, "கலைவாணி ! என் பிள்ளைக்கு அருள்வாய் நீ என சைவ சமயத்தவர்கள் தமது கல்வித் தெய்வத்திடம் மனம் வாக்குக் காயத்தால் மன்றாடுவது மட்டுமன்றி, அன்று எழுத்தறிவித்தவனை இறைவனாக ஏற்றிப் போற்றுவதோடு கையுறையுங் கொடுத்து களிப்படையச் செய்யுங் காட்சி மூலம் பிள்ளையின் கல்விக்குக் கொடுக்கும் மாட்சியை மட்டிட முடிகிறது.

சைவ சமயத்தவர்கள் மட்டுமன்றி பௌத்தர்களும், இஸ்லாமியர்களும் கத்தோலிக்கர்களும் ஏனைய வேறு சமயத்தவர்களும் வித்தியாரம்பத்துக்கு விசேட முக்கியத்துவங் கொடுத்து வருகின்றமை கவனிக்கத்தக்கதாகும்.

தாயின் வயிற்றில் பத்து மாதம் (கரு) குழந்தை குடியிருக்கின்றது. தாயினதும், தந்தையினதும் பல்வேறு இயல்புகளையும் பெற்று குழந்தை இப்புவிக்கு வந்தடைகிறது. பிள்ளை பாடசாலைக்குச் செல்லும் காலம்வரை பிள்ளையுடன் நெருங்கிய தொடர்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்பவர்களில் தாய தந்தையர்களே மிக முக்கியமானவர்களாவர்.

பெற்றோர் குழந்தையின் ஆரம்ப உள அறிவு விருத்திக்கு அத்திபாரம் இடுகிறார்கள். பாடசாலைக்குச் செல்லத் தொடங்கிய பின்பும் பிள்ளை பெருமளவு நேரத்தை வீட்டிலேயே செலவழிக்கின்றது.

தன்னடைய மகனை கல்வியறிவிற் சிறந்த "சான்றோனாக" உயர்த்துவது தந்தையின் பொறுப்பு என்பதனை சங்க கால இலக்கியமான புறநானூறு "சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" என அழகாக வலியுறுத்திக் கூறுகின்றது.

"தந்தையோடு கல்வி போம்" என்பது ஆன்றோர் அறிவு மொழியாகும். "துள்ளித் திரிகின்ற வேளையிலே என் துடுக்கடக்கிப் பள்ளிக்கு வைத்திலனே என் தந்தையாகிய பாதகனே" என்கிறார் பட்டினத்தார்.

துள்ளித் திரியும் பருவத்தில் அடி மூலம் அடக்கியாகுதல் தனக்குக் கல்வியைப் பெற்றுத் தரவில்லையே என கல்வியின் அருமை பெருமை தெரியும் பிற்காலத்தில் மனம் நொந்து தந்தையைப் பாதகனே என இழித்துரைக்கும் பாங்கினைக் காண்கிறோம். "தந்தை மகற்காற்று நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்" என்றும், "மகன் தந்தைக் காற்று நன்றி இவன் தந்தை என் நோற்றான் கொல் என்னுஞ் சொல் என்றும் வள்ளுவப் பெருந்தகையால் சொற்சுருக்கமாகவும், பொருட் பெருக்கமாகவும் கூறப்பட்டிருப்பது தந்தையின் கல்விக் கடமையால் மகன் முன்னேறி வருவதும் மகன் முன்னேற்றமடைவதால் தந்தை மற்றையோரால் மதிக்கப்பட்டு தரம் உயர்த்துவதுமாகிய நிலையினை நாம் கண்டுகொள்ள முடிகிறது.

பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்து பகலிரவாய் குழந்தையை வளர்ப்பவள் தாயாகும். அவளது அன்புக்கிணையாக இந்த உலகத்தில் எதனையுமே கூறமுடியாது. கருவிலிருந்து கல்லறைவரை கற்றல் இடம்பெறுகின்றது. குழந்தை பூமியை வந்தடையும் வரை தாயையே தஞ்சமென பிற உலகத் தொடர்புகளெதுவுமின்றி வாழ்கிறது. தாய் கருவுற்ற காலத்தில் அதிர்ச்சிகளின்றியும் கவலைகளின்றியும் வாழவேண்டியதன் அவசியத்தை விஞ்ஞானிகள் விளக்கியுள்ளனர். தனது பிள்ளையின் உள உடல் வளர்ச்சி கண்டு அதனால் வேறொருவரும் அடையாத பேறுபெற்று பேருவகையுற்று நடமாடுகின்ற தெய்வம் தாயைத் தவிர வேறொருவருமில்லை.

தனக்கொரு குழந்தை கிடைக்கும் போது அத்தனை தாய்மாரும் அகமகிழ்கின்றனர். அந்த நாளை சுபநாளாக நன்நாளாக பெருநாளாகப் போற்றி இறும்புதடைகின்றனர். எனினும் தன்னுடைய மகன் "சான்றோன்" எனக் கேட்கும் போது தாயானவள் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. இதனையே,

"ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்" என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவர் கூறியுள்ளார். பிள்ளைகளின் உயர்வுகண்டு உள்ளம் பூரித்துப் பெருமிதமடையும் கள்ளமில்லா உள்ளம் கொண்டவள் தாய்.

அமுதூட்டும் வேளையிலும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் நல்லொழுக்கங்கள் ஒன்றையும் ஒழுகவிடாது ஒழுங்காக ஊட்டக்கூடிய சந்தர்ப்பங்கள் தாய்க்கு அதிகம் கிடைக்கிறது. தாயின் ஆளுமை இயல்புகள் அவளது பிள்ளைகளிற் செறிகின்றன. உலகத்தலைவர்கள் பலரின் உயர் நிலைக்கு தாய்மார்களின் செயற்பாடுகள் துணைநின்றன. உடற்தோற்றம், உள இயக்கம், மன உணர்ச்சி போன்றன தாயைப் பிரதிபலிப்பதாலேயே "தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலை" என்ற பழமொழி வழங்கி வருகின்றது.

குழந்தையுள்ளம் ஒரு வெற்றுப் பலகையாகும். அக்கள்ளமில்லா வெள்ளையுள்ளத்தில் நல்லனவற்றை உருவாக்க வேண்டியது தாயின் பொறுப்பாகும். "அம்மா" என்பது குழந்தையின் முதல் வார்த்தையாகும். அவ்வார்த்தையினை வெளிப்படுத்தும் குழந்தையினது ஆற்றலை ஆற்றுப்படுத்த வேண்டியது தாயின் தலையாய பொறுப்பாகும். பிள்ளையின் உடம்பு வளர வேண்டுமென விரும்பும் தாய்மார்கள் அத்தனை பேரும் பிள்ளையின் அறிவும் வளர வேண்டுமென்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. குழந்தையை ஏமாத்தியாவது கூடுதலான உணவை ஊட்ட விரும்பும் தாய்மார்கள் ஒப்பீட்டளவில் குறைவு என்பதை யாரும் மறுக்க முடியாது.

குழந்தையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியது பெற்றோரின் பொறுப்பாகும். அன்பு, காப்பு, கணிப்பு போன்றன பிள்ளையின் அடிப்படை உளவியற் தேவைகளுட் சிலவாகும். உணவு, உடை போன்ற உடலியற் தேவைகளும் பெற்றோரால் பூர்த்தி செய்யப்பட வேண்டும். உளப் பசியையும் போக்கி அவ்வப்போது அறிவுப்பசியைத் தூண்டி அதற்கு இரைதேட தன் பிள்ளையை ஊக்குவிப்பது பெற்றோரின் கடமையாகும்.

"நீயொரு கெட்டிக்காரன்" என்று சொன்னதும் அகமும் முகமும் மலர்கின்ற பிள்ளை உள்ளங்களை நாம் காண முடிகிறது. பிள்ளையின் கல்வி விருத்தியை பிரதான நோக்கமாகக் கொண்டு கற்றலில் ஆர்வம் ஏற்படுத்தக்கூடிய ஊக்குவிப்புக்களுக்கு சிறு வயதிலிருந்தே முக்கியம் கொடுக்க வேண்டும். பிள்ளையின் உள வயதிற்கேற்ப ஊக்குவிப்புக்களின் மாதிரிகளும் அளவும் வேறுபடலாம் என்பதைப் பெற்றோர் அறிந்திருப்பது அவசியமாகும். பாராட்டுதலும் பரிசில் வழங்குதலும் கணிப்புக் கொடுத்தலும் கல்வி விருத்திக்கு ஊக்கமளிக்குமென உணரும் சந்தர்ப்பங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கபடி பயன்படுத்திக் கொள்ளல்வேண்டும். சிறுவயது முதல் தினமும் கல்வி விருத்திக்கு எடுத்து வரும் நடவடிக்கைகளின் விளைவே பரீட்சையில் சித்தியடைதல் என்பதனை என்றென்றும் மறந்துவிடாது மனதில் வைத்திருக்க வேண்டியது பெற்றோரின் கடமையாகும்.

கண்டிப்பும் தண்டனை வழங்கலும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பொருத்தமான அளவில் மாத்திரம் காணப்படுவதே விரும்பத்தக்கதாகும். ஏதாவது ஒரு சோதனையில் எதிர்பாராத வகையில் குறைவான புள்ளிகளைப் பெற்றுவிட்டால் முன்பின் யோசியாது ஆத்திரப்பட்டு "நீயொரு மொக்கு" என்றும், "உனக்கு இனிப் படிப்பு வராது" என்றும் பிள்ளையின் உள்ளம் பாதிக்கக்கூடிய வகையில் சில பெற்றோர்கள் செயற்படுவது வேதனைக்குரியதாகும். தன்னுடைய பிள்ளை கண்டிக்கப்படுவதை பெரும்பாலான பெற்றோர் பொதுவாகவே விரும்புவதில்லை. பிள்ளை மீது பெற்றோர் பாசம் வைத்திருப்பது விரும்பத்தக்கதே. எனினும் நன்நோக்கத்தோடு ஆசிரியர் கண்டிப்புடன் நடப்பதை பெற்றோர் வரவேற்க வேண்டும்.

"காலை எழுந்தவுடன் படிப்பு" என்ற பாரதியாரின் பாடலை தம் பிள்ளைளூடாக நடைமுறைப்படுத்துவது நல்ல பலன் கொடுக்கும். காலையில் மன அமைதியும் நிம்மதியும் நிறைந்திருக்கும். காலையில் மனம் மட்டுமன்றி புறச் சூழ்நிலைகளும் கற்றற் செயற்பாட்டிற்கு மிகவும் பொருத்தமானதாக அமைகிறது. காலம் பொன்னானது. கடமை கண்ணானது என்று கூறுவார்கள். தினமும் கற்பது பிள்ளையின் கடமையாகும். பொன்னான நேரத்தை கண் போன்ற கல்விக் கடமையில் செலுத்தாது வீணே காலத்தைக் கரைத்து விட்டு பிற்காலத்தில் சிந்தை கலங்குவதில் பயனில்லை.

ஆசிரியர் வழங்கும் கற்றல் தொடர்பான வீட்டு வேலையைச் செய்வதற்கு வீட்டில் மாணவன் நேரத்தை ஒதுக்க வேண்டும். இதனைக் கண்காணிக்க பெற்றோர் தமது நேரத்தை ஒதுக்கத் தவறக்கூடாது. பாடசாலையில் என்ன படித்தீர்கள்? என அவ்வப்போது வினாவுவது மூலமும் அப்பியாசப் புத்தகங்களை பார்வையிடுவது மூலமும் பாட ஆசிரியர்களோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது மூலமும் பிள்ளைகளின் சகபாடிகளது தொடர்பை அவதானிப்பது மூலமும் கண்காணிப்பை வலுப்படுத்தி குறைபாடுகளை களைவதற்கு பெற்றோர் முயற்சிக்க வேண்டும்.

கணிப்பீடு, தவணைச் சோதனை போன்றவற்றின் அடைவுகளை நுணுக்கமாகப் பரிசீலிக்க வேண்டியது பெற்றோரின் கடமையாகும். தேவையான செயற்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் பிள்ளையின் கற்றலை மேலும் ஊக்குவிக்க முயற்சிக்க வேண்டும். இணைபாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்களை ஈடுபட வைக்க தங்களால் ஆன பங்களிப்பை வழங்க பெற்றோர் எந்தச் சந்தர்ப்பத்திலும் தவறக்கூடாது.

எங்கள் பிரதேசக் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளில் அண்மைக் காலத்தில் தொலைக்காட்சியின் பங்களிப்பு முக்கியத்துவம் பெற்றிருப்பதை யாரும் மறுக்க முடியாது. தொலைக்காட்சியின் நல்ல நிகழ்வுகளை பார்வையிடுவது பிரச்சனைக்குரியதல்ல. தவறான மன எழுச்சிகளை ஏற்படுத்தக்கூடிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுடன் மாணவர்களும் பெற்றோர்களும் சங்கமமாகி இருப்பதைத் தவிர்க்க வேண்டும். பிஞ்சு உள்ளங்களின் மனங்களில் தவறான மன எழுச்சிகள் தாக்கத்தை ஏற்படுத்தி கல்விப் பயணத்தில் அவர்கள் இடர்பட வாய்ப்புண்டு.

அண்மைக்காலங்களில் தற்கொலை, போதைப்பொருட் பாவனை, மாணவர்களின் நெறிபிறழ்வான நடத்தைகள் அதிகரித்துச் செல்வதனை ஊடகங்கள் எடுத்துக்காட்டுகின்றது. இவற்றுக்கெல்லாம் தொலைக்காட்சி நாடகங்களின் பங்களிப்பு முக்கியமானதாகக் காணப்படுகிறது. மாணவர் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொள்ளும் பெற்றோர்கள் விரும்பத்தகாத தொலைக்காட்சி நாடகங்களைத் தவிர்க்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது. இன்றைய மாணவர்கள் எதிர்காலத்தில் நல்ல இயலுமைகளுடன் சகல ஆற்றலுடனும் வளர்க்கப்படவேண்டுமாக இருந்தால் பெற்றோர்கள் சிறந்த வழிகாட்டிகளாக காணப்படவேண்டியது காலத்தின் அவசிய தேவையாக உள்ளது. தொலைத் தொடர்பு சாதனங்களை மாணவர்கள் பயன்படுத்துவது சில விரும்பத்தகாத நடவடிக்கைகளுக்கு ஈட்டிச்செல்வதாக சொல்லப்படுகிறது. இதனைப் பெற்றோர்கள் உரிய முறையில் கண்காணிக்க வேண்டும். இணையத்தின் வழி மாணவர்கள் கல்வி பயில்கின்ற போது என்ன விடயங்களை கற்கிறார்கள் என்பதை பெற்றோர்கள் மேற்பார்வை செய்யவேண்டும். மாணவர்களுக்கு தேவைக்கு அதிகமான வசதிகளையும் வாய்ப்புக்களையும் வழங்குவதும் சில சந்தர்ப்பங்களில் அவர்களை கற்றலில் ஆர்வம் அற்றவர்களாக வழிப்படுத்துவதாக அமையும். தேவை அறிந்து ஆரோக்கியமான விடயங்களுக்கு மாத்திரம் வள வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பது முக்கியமானது. இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள். அந்த வகையில் பெற்றோர்கள் மாணவர்களை ஒழுங்கான வகையில் நெறிப்படுத்தி நம்பிக்கைக்குரிய சமுதாயமொன்றை உருவாக்குவோமாக.

–ஆக்கம் திரு.அ.லிங்கராஜ்

ஆசிரியர்,

B.A Dip.in Ed, M.A (2nd Upper), SLTS 2-II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றெழுத்தில் வாழ்க்கை




உலகிலுள்ள "உயிர்" மூன்றெழுத்து
உயிரை இயக்கும் "சக்தி" மூன்றெழுத்து
சக்தியின் வடிவம் "அன்னை" மூன்றெழுத்து
அன்னை காட்டும் "அன்பு" மூன்றெழுத்து
அன்பை உயர்த்தும் "அறிவு" மூன்றெழுத்து
அறிவை வளர்க்கும் "பள்ளி" மூன்றெழுத்து
பள்ளியில் பயிலும் "கல்வி" மூன்றெழுத்து
கல்வியால் உருவாகும் "பதவி" மூன்றெழுத்து
பதவியைச் சிறப்பிக்கும் "இளமை" மூன்றெழுத்து
இளமை தரும் "மணம்" மூன்றெழுத்து
மணத்தால் இணையும் "மனைவி" மூன்றெழுத்து
மனைவியால் உருவாகும் "மழலை" மூன்றெழுத்து
மழலைக்குச் செலவாகும் "பணம்" மூன்றெழுத்து
பணத்தை தேடும் "கைகள்" மூன்றெழுத்து
கைகள் சோரும் "முதுமை" மூன்றெழுத்து
முதுமையின் பின் "முடிவு" மூன்றெழுத்து
முடிவின் பின் தேவைப்படும் "பெட்டி" மூன்றெழுத்து
பெட்டியிலடங்கும் "பிணம்" மூன்றெழுத்து
பிணம் எடுத்துச் செல்லும் "ஊர்தி" மூன்றெழுத்து
ஊர்தி செல்லும் இடம் "சுடலை" மூன்றெழுத்து
சுடலையில் வைக்கும் "கொள்ளி" மூன்றெழுத்து
கொள்ளியில் எரிந்த "அஸ்தி" மூன்றெழுத்து
அஸ்தியைக் கரைக்கும் "கடல்" மூன்றெழுத்து

**திருமதி வி. சோதிநாதன்**
பிரதி அதிபர்,
பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி SLTS 2-I



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனாக வாழும் வழிகள்



மிகவும் மதிப்பிற்குரியவர்கள் - தாய், தந்தை
மிகவும் நல்ல நாள் - இன்று
மிகப் பெரிய வெகுமதி - மன்னிப்பு
மிகவும் வேண்டியது பணிவு
மிகவும் வேண்டாதது வெறுப்பு
மிகவும் பெரிய தேவை நம்பிக்கை
மிகவும் கொடிய நோய் - பேராசை
மிகவும் சுலபமானது குற்றங்காணல்
தரமற்ற குணம் - பொறாமை
நம்பக்கூடாதது வதந்தி
ஆபத்தைத் தருவது அதிக பேச்சு
செய்யக் கூடாதது நம்பிக்கைத் துரோகம்
செய்யக்கூடியது உதவி
விலக்க வேண்டியது சோம்பேறித்தனம்
உயர்வுக்கு வழி உழைப்பு
நழுவவிடக் கூடாதது வாய்ப்பு
மறக்கக் கூடாதது நன்றி
மறக்கக்கூடியது தீமை
ஒவ்வொரு நிமிடமும் இருக்க வேண்டியது -
இறைபயம்

திருமதி அ. சிவநேசன்,
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மை



பண்டைக்காலம் தொட்டே தாய்மார்கள் தானே குழந்தை களைப் போற்றி வளர்த்து வருகின்றார்கள். தாயின் மடி தான் குழந்தையின் பள்ளிக்கூடம். அதனால் தான் வேதங்கள் உரைக்கின்றன "தாயே உனது கடவுள் ஆகட்டும் தந்தையே உனது கடவுளாகட்டும், உனது குருவும் உன் கடவுளாகட்டும்" ஆகையால் எப்போதும் தாய்க்கே முதல் மரியாதை தரப்படுகிறது. கடவுளர்களின் பெயர்களை எடுத்துக் கொண்டாலும் சீதாராமா, ராதாகிருஸ்ணா, பார்வதி பரமெஸ்வரன் என பெண்மை முதலில் போற்றப்படுகின்றது.

தாய்தான் தன் குழந்தையின் வாழ்க்கையை உருவாக்குபவர். குழந்தை செய்த தவறுக்கு தண்டனை அளித்தாலும் அதையும் அவள் அன்புடன் தான் செய்வாள். அவள் எண்ணம் மட்டும் குழந்தையை நல்ல பாதைக்கு இட்டுச் செல்வது தான். நமக்கு அத்தகைய தாய்மார்கள் தான் இன்றைய தேவை.

நமது நாட்டின் இனிய உணர்வுகளில் எல்லாம் மிகப்பெரிய இனிய உணர்வு தாயின் மேல் வைக்கும் அன்பு தான். தாய்மையை விடச் சிறந்ததும் புனிதமாகதும் எதுவும் இல்லை. தாயின் ஆசைகளை நிறைவேற்றும் குழந்தைகள் தான் நமக்குத் தேவை. ஒரு இல்லம் உருவாக்கப்படுவது அன்னையால் தான். அத்தோடு அதைப் பேணிப் பாதுகாத்து குடும்பத்தினரது மன உறைவிடமாகத் திகழ்ந்து தெம்பூட்டி வளர்த்து வருதலையே தனது இலட்சியமாகக் கொண்டிருப்பார். வீட்டு அங்கத்தவர்களைப் பாசத்தால் இணைக்கும் மூலப் பொருளும் அன்னையே.

பிள்ளைகளுக்கு அன்புடன் அறிவுரையும் ஊட்டி, பொறுமை, கண்ணியம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகிப்புத்தன்மை, ஊக்கம் போன்றவற்றை விளங்க வைத்து தவறு செய்தால் சுட்டிக்காட்டி நெறிப்படுத்துவதைத் தனது சிரமேற் பணியாகக் கொள்பவரும் அன்னையே. தாய்ப்பாசத்தின் வலிமையையும் ஆழத்தையும் அளவிட்டுக் கூற முடியாது. எப்போதும் விழிப்புடன் இருக்கும் தாயை இயற்கையின் அன்புப் பிரதிநிதி என்றே கூறுவார்கள். "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்று கூறுவதும் இதனால் தான். தாய் தன் குழந்தைக்காக எதையும் செய்வாள்.

தாயின் குணங்களில் உன்னதமானது இரக்கம். "அன்னையும் தயையும்" என்ற கலித்தொடர் ஒரு நல்ல தாயின் இரக்கத்தை மெச்சுகின்றது. இரக்கம் அல்லது தயை என்ற நற்குணம் பல நல்ல செயல்கள் மூலம் வளருவது என்று சொல்வதில் தவறு இல்லை. ஒரு நல்ல தாயிடம் இயல்பாக இருக்க வேண்டிய நல்ல செயல்கள் எல்லாம் ஒருங்கே அமைந்தவர் "அம்மா" அவரின் உருவமே நற்பண்புகளின் உறைவிடம்.

ஒரு நல்ல தாயின் குணாதிசயங்களை நமது முன்னோரின் அனுபவச்சரமான பழ மொழிகள் பலபடக் கூறியுள்ளன. தாய் என்ற தத்துவத்தில் சமயத்தின் செல்வாக்கு இருப்பதை மறக்க முடியுமா? தொல் பழங்காலத்தில் தாய் வழிபாடே சிறப்புப் பெற்று விளங்கியது. அம்மன், அம்பாள், அம்மை, மாதா என்ற சொல் வழக்குகள் தாய்த் தெய்வ வழிபாட்டைக் குறிக்கின்றன. சிவபெருமான் "இவள் நம்மைப் பேணும் அம்மை காண்" என்று பார்வதி தேவிக்குக் கூறிய காரணத்தினால் புனிதவதி "காரைக்காலம்மையார்" ஆனார் அல்லவா!

தாய் என்ற தத்துவத்தில் சமூகத்தின் செல்வாக்கு காணப்படுவதையும் நாம் மறக்க முடியாது. மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய பெண்மணியை அன்னை என்றோ அம்மையார் என்றோ கூறுவது இன்றும் போற்றப்படும் ஒரு சமூக வழக்கம் ஆகும். அன்னை தெரேசா, இந்திராகாந்தி அம்மையார் என்று பலரும் கூறுதலை யார் தான் மறக்க முடியும்.

தாய் என்ற தத்துவத்தில் அடங்கியுள்ள சிந்தனைகளை ஒரு சேரத் தொகுத்துக் கூறும் முறையில் "கொன்றை வேந்தன்" "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" எனக் கூறியுள்ளமையை யார் தான் மறக்க முடியும்? ஒரு மாபெரும் தளபதியாகவோ, ஒரு சிந்தனை வளம் மிக்க தத்துவஞானி ஆகவோ புகழேணியின் உச்சியை அடைந்த ஒவ்வொரு மனிதனும் ஒரு தாய்க்கு பிள்ளை தானே! மகாத்மாகாந்தி, ஆதிசங்கரர் முதலானோர் தாம் பெற்ற உயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்கு ஆதாரமான தாயை வந்தனை செய்ததை நாம் அறிவோம்.

நவீன தமிழ் இலக்கிய வகைகளில் தாய் பற்றிய கதைகள், கவிதைகள், கடிதங்கள் என்பன சிறப்பிடம் பெற்றுள்ள அருமையை இலக்கியப் பிரியர்கள் அறிவர். இரசியமொழியில் மாக்சிம் கோர்கி எழுதிய "Mother" என்னும் நாவல் "தாய்" என்ற பெயரில் தமிழ் வடிவம் பெற்றுள்ளமையை நாவல் வாசகர்கள் அறிவர். தமிழில் தி.ஜானகி ராமன் எழுதிய "அம்மா வந்தாள்" என்பது நல்லதொரு நாவல் ஆகும்.

இருபத்தோராம் நூற்றாண்டு தொடங்கும் வரை தமிழ் சினிமாத்துறை தமிழ் மக்களின் எண்ணம், சொல், செயல் என்பவற்றில் செலுத்திய ஆதிக்கத்தை எல்லோரும் புரிந்து கொள்வார்கள். இத்தகைய முறையில் தயாரிக்கப்பட்ட தமிழ் பேசும் படங்களிலே "தாய்" பற்றிய சிந்தனைகளும் முக்கியத்துவம் பெற்றதைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். "தாய் சொல்லைத் தட்டாதே", "தாயின் மேல் ஆணை", பெற்ற மனம்", "தாய்க்குப் பின் தாரம்", "அன்னை ஓர் ஆலயம்" என்பன குறிப்பிடத்தக்க சில படங்கள் ஆகும்.

குழந்தை இலக்கியம் இப்போது தமிழில் புதிய வளர்ச்சிப் பரிமாணங்களைப் பெற்றுள்ளது. அந்த வகையில் அழ.வள்ளியப்பா, குழந்தை கதிரேசன், தில்லைச்சிவன், வேந்தனார், த.துரைசிங்கம் போன்றவர்கள் படைத்த பாலர் பாடல்களிலே அம்மா பற்றிய சிந்தனைகள் காணப்படுகின்றன.

பாமர மக்கள் வளர்த்த வாய் மொழிப் பாடல்களிலே தாலாட்டுப் பாடல்கள் தாயின் அன்புள்ளத்தை நாட்டார் இசைச் சுவையோடு சித்தரிக்கின்றன. இறுதியாகச் சுருங்கச் சொன்னால் பாமரர் தொடக்கம் பண்டிதர் வரையில் உள்ள எல்லோருமே அம்மாவின் தியாகம், பாசம், ஆதரவு போன்ற குணாதிசயங்களால் உருவானவர்களே. அத்தகைய ஒரு தாயின் பிள்ளைகளாகப் பிறக்கும் அனைவரும் அதிக்ஷ்டசாலிகளே.

*திருமதி. தி.சுதர்சன்*

ஆசிரியர், B.A Dip.in Ed, SLTS 2-II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2013ம் ஆண்டு வலயமட்ட போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

## கட்டுரைப் போட்டி

சதீஸ்கரன் சயிந்தா தரம் 8, 2ம் இடம்

## சமூக விஞ்ஞானப் போட்டி

சதீஸ்கரன் சயிந்தா தரம் 8, 2ம் இடம்

## நாட்டார் பாடல்

திறந்த போட்டி குழு 2 தரம் 6-11

- வசந்தகுமார் பார்த்தீபன்
- கனகசபை மதுசன்
- சிவராசா சுயன்
- கணேசமூர்த்தி அஞ்சலா
- திறந்த போட்டி குழு
- லோகநாதன் கார்த்தியாயனி
- கேதீஸ்வரன் உணர்வரசி

## திருக்குறள் மனனப் போட்டி

சிவரூபன் யாழினி தரம் 1, 4ம் இடம்

## Dictation

சதீஸ்கரன் சயிந்தா தரம் 8, 1ம் இடம்

## Creative Writing

சதீஸ்கரன் சயிந்தா தரம் 8, 1ம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணமட்டப் போட்டி முடிவுகள் - 2013

## சமூக விஞ்ஞானப் போட்டி

சதீஸ்கரன் சயிந்தா 1ம் இடம்

## கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களுக்கிடையிலான கட்டுரைப் போட்டி

சடாட்சரமூர்த்தி திச஌ந்தி

## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பிரதேச சபையால் நடாத்திய போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. சிவரூபன் யாழினி | தரம் 1 | கதைகூறல் | 1ம் இடம் |
| 2. சதீஸ்கரன் சயிந்தா | தரம் 8 | கவிதை | 1ம் இடம் |
| 3. லோகநாதன் கார்த்தியாயனி | தரம் 10 | கட்டுரை | 1ம் இடம் |

## முதியோர் தினத்தை முன்னிட்டு பிரதேச சபையால் நடாத்திய போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. கணேசமூர்த்தி அஞ்சலா | தரம் 11 | மாற்றுவலு உடையோர் | 2ம் இடம் |
| 2. வசந்தகுமார் பார்த்தீபன் | தரம் 9 | சிறுவர் தினம் | 2ம் இடம் |
| 3. சதீஸ்கரன் சயிந்தா | தரம் 8 | முதியோர் தினம் | 1ம் இடம் |

## 2014ம் ஆண்டு கோட்டமட்ட ஆங்கிலதினப் போட்டி

| | | | |
|---|---|---|---|
| 1. சதீஸ்கரன் சயிந்தா | தரம் - 9 | Dictation | 1st place |
| 2. ஜெகநாதன் கிருசாந்தினி | தரம் - 7 | Dictation | 1st place |
| 3. ஜெகநாதன் கிருசாந்தினி | தரம் - 7 | Story telling | 2nd place |
| 4. சதீஸ்கரன் சயிந்தா<br>5. சண்முகராசா சாலினி<br>6. ஜெகநாதன் தர்மிகா<br>7. பாஸ்கரன் குயிலினி | தரம் 9,10 | Role Play | 2nd Place |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2013ம் ஆண்டு கோட்ட மட்டப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. சதீஸ்கரன் சயிந்தா | தரம் 8 | கட்டுரை | 1ம் இடம் |
| 2. வசந்தகுமார் பார்த்தீபன் | தரம் 9 | பேச்சு | 2ம் இடம் |
| 3. சதீஸ்கரன் சரண்ராஜ் | தரம் 5 | கதை கூறல் | 3ம் இடம் |
| 4. ஜெகநாதன் தர்மினி | தரம் 6 | தனி நடனம் | 3ம் இடம் |
| 5. பாஸ்கரன் குயிலினி | தரம் 9 | தனி நடனம் | 3ம் இடம் |
| 6. சதீஸ்கரன் சயிந்தா | தரம் 8 | கணிதப்போட்டி | 1ம் இடம் |
| 7. சதீஸ்கரன் சயிந்தா | தரம் 8 | சமூகவிஞ்ஞானப் போட்டி | 2ம் இடம் |
| 8. விக்னேஸ்வரன் விந்துஜன் | தரம்11 | 400m ஓட்டம் | 1ம் இடம் |

## நடனம் குழு –I தரம் 6-9 3ம் இடம்

ஜெகநாதன் தர்மிகா
ஜெகநாதன் இசைநிலா
லோகநாதன் சிவதனு
பாஸ்கரன் குயிலினி
வசந்தகுமார் அன்பரசி
சதீஸ்கரன் சயிந்தா
சண்முகராசா சாலினி

## பாஓதல்

ச. சாலினி தரம் 9 3ம் இடம்

## நாட்டார் பாடல் – திறந்த போட்டி (குழு 2) தரம் 6-11 1ம் இடம்

வசந்தகுமார் பார்த்தீபன்
சிவராசா சுயன்
லோகநாதன் கார்த்தியாயனி
கேதீஸ்வரன் உணர்வரசி
கனகசபை மதுசன்
கணேசமூர்த்தி அஞ்சலா
திறந்த போட்டி குழு

## ஏனைய போட்டிகள்

| | | | |
|---|---|---|---|
| சிவரூபன் யாழினி | தரம்1 | திருக்குறள் மனனப் போட்டி | 1ம் இடம் |
| வசந்தகுமார் அஸ்வின் | தரம் 6 | Copy writing | 1ம் இடம் |
| ஜெகநாதன் கிருசாந்தினி | தரம் 6 | Creative Writing | 2ம் இடம் |
| ஜெகநாதன் கிருசாந்தினி | தரம் 6 | Dictation | 3ம் இடம் |
| சதீஸ்கரன் சயிந்தா | தரம் 8 | Creative Writing | 1ம் இடம் |
| சதீஸ்கரன் சயிந்தா | தரம் 8 | Dictation | 1ம் இடம் |
| வசந்தகுமார் பார்த்தீபன் | தரம் 9 | Creative Writing | 2ம் இடம் |
| வசந்தகுமார் பார்த்தீபன் | தரம் 9 | Dictation | 1ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப்பரிசில் பரீட்சையில் 70க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றோர்

2012இல் தோற்றிறோர் - 05

ர.கருஷாந்குனி 145

வ.அஸ்வினி 75

ஜெ.தர்மினி

2013 ஆண்டு தோற்றியோர் - 04

ச.சரண்ராஜ் - 120

சந்திரன் டிலக்சன 102

கிருஸ்ணபிள்ளை ரிஜீபன் - 71

**க.பொ.த சா/த பரீட்சையில் சித்திடைந்தோர் - 2013**

1. செல்வன் க.வினோத்
2. செல்வி ச. திசாந்தி
3. செல்வி த.அஞ்சலா

## 63 ஆண்டு நிறைவு விழாவில் பரிசு பெறுவோர்

2012 ம் ஆண்டு மாகாண மட்டப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

சதீஸ்கரன் சயிந்தா தரம் - 7 சமூகவிஞ்ஞானப் போட்டி 1ம் இடம்

2012 ம் ஆண்டு தேசிய மட்டப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

சதீஸ்கரன் சயிந்தா தரம் - 7 சமூகவிஞ்ஞானப் போட்டி 1ம் இடம்

2014ம் ஆண்டு கோட்ட மட்ட தமிழ் தினப் போட்டி

சதீஸ்கரன் சயிந்தா தரம் - 9 கட்டுரை 3ம் இடம்

2014ம் ஆண்டு கோட்டமட்ட சமூகவிஞ்ஞானப் போட்டி

சதீஸ்கரன் சயிந்தா தரம் - 9 1ம் இடம்

2014ம் ஆண்டு சுவாமி விவேகானந்தரின் பொன் மொழிகள் எழுதும் போட்டியில் அகில இலங்கையில் 1ம் இடம் பெற்றவர்

சதீஸ்கரன் சயிந்தா தரம் - 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலை ஆளணியினர்

1.திருமதி.த.கனகசபை, அதிபர், B.Ed (கல்விமாணி), SLPS 2-II

2. திருமதி.வி.சோதிநாதன், பிரதி அதிபர், பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி SLTS 2-I

3. திருமதி. நி.சுதர்சன், ஆசிரியர், B.A Dip.in Ed, SLTS 2-II

4. திரு.சி.சிங்கராசா, ஆசிரியர் பயிற்றப்படட்ட ஆரம்பக்கல்வி SLTS 2-II

5. திரு.அ.லிங்கராஜ், ஆசிரியர், B.A Dip.in Ed, M.A (2nd Upper), SLTS 2-II

6. திரு.ஏ.தனேஸ்வரன், ஆசிரியர், B.A Dip.in Ed, SLTS 2-II

7. திரு.சி.தினேஸ், ஆசிரியர், கற்பித்தலில் டிப்ளோமா, கணிதம், SLTS 2-II

8. திருமதி.ஜெ.ஜெயரூபன், ஆசிரியர் பயிற்றப்பட்ட, ஆரம்பக்கல்வி, SLTS 3-I

9. திருமதி.தி.சசிக்குமார் ஆசிரியர் H.N.D.A, வணிகப்பட்டதாரி, SLTS 2-II

10.திருமதி க. நிசாந்தன், ஆசிரியர், கற்பித்தலில் டிப்ளோமா, நடனம் SLTS 3-I

11. திருமதி.ஸ்ரீ.சிவரூபன் ஆசிரியர் பயிற்றப்பட்ட, ஆரம்பக்கல்வி, SLTS 2-II

12. திருமதி.இ.புவியரசன், ஆசிரியர்

13. திருமதி.தேவானந், ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2014 ஆம் ஆண்டு விழாவுக்கான நூல் வெளியீட்டுக்கு அநுசரணை



அமரர் தம்பையா மயில்வாகனம் (முத்துக்குமாரு), ஞானிமடம், அவர்களின் ஞாபகார்த்தமாக இம்மலருக்கான நிதி அவரது பிள்ளைகளால் அன்பளிப்புச் செய்யப்படுகிறது.

திரு.ம.வரதராசா (இலங்கை)

திரு.ம.சற்குணானந்தராசா (கனடா)

திரு.ம.நிற்குணானந்தராசா (கனடா)

திருமதி.இராமச்சந்திரன் வனசராணி (சுவிஸ்)


திருமதி.பாஸ்கரலிங்கம் சுமதி (இலங்கை)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org